Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

Thirumurugan Com Net

திருமுருகன் கொம் நெற்

WESTERN UNION Money Transfer

Fed

Inland & I.D.D Calls, Internet-Browsing & E-mail, Fax, Photo Copy, Computer typing & Printing, Designing-Cards, Laminating, CD-Writing, Binding, Parcel Services, Bus-Van-Flight Ticketing Services, & Computer-Hand phone Accessories,


259, K.K.S.Road Jaffna. Tel - 024 222 3958 Fax - 024 222 7836

E.mail thirumurugan@lycosmail.com

46, Adiyapatham Road, thirunelvely, Jaffna. Tel - 024 222 7560 Fax - [illegible]

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு :2035 தை – 07 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 துல்ஹஜ் 09 (20.01.2005) வியாழக்கிழமை இதழ்: 112

## யு.என்.எச்.சி.ஆரின் உயர்மட்டப் பிரதிநிதிகள் குழு தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு!





(கிளிநொச்சி)

யு.என்.எச்.சி.ஆர் உதவி உயர் ஆணையாளர் கெமல் மொர்ஜேன் தலைமையிலான அதிகாரிகள் குழுவினர் கிளிநொச்சிக்கு விஜயம் செய்து சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வது குறித்து விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தினர்.

விமானப்படை ஹெலிகொப்டர் மூலம் கொழும்பிலிருந்து நேற்று நண்பகல் கிளிநொச்சியை வந்தடைந்த யு.என்.எச்.சி.ஆர். பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்துக்கு அழைத்து வரப்பட்டனர். அங்கு விடுதலைப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அடுத்த 5 ஆண்டுகளுக்குள் எந்தத் தேர்தலும் கிடையாது!

### ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு



அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு நாட்டில் எந்தவொரு தேர்தலையும் நடத்த வேண்டிய தேவையில்லை. எனவே அடுத்த தேர்தலொன்று வரும்வரை அனைவரும் நாட்டின் வளர்ச்சிக்காக இணைந்து செயற்பட முன்வர வேண்டுமென ஜனாதிபதி சந்திரிகா கேட்டுக் கொண்டுள்ளார்.

அம்பாந்தோட்டையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது.

சுனாமி பேரனர்த்தத்துக்கு முன்பிருந்ததைவிட சிறந்ததொரு நாடாக இலங்கையை கட்டியெழுப்ப மக்கள் அனைவரும் முன்வர வேண்டும்.

நாட்டைமீளக் கட்டியெழுப்பும் ஆற்றலும், வல்லமையும் அரசாங்கத்திடம் உள்ளது. அனைவரும் ஒன்றிணைந்தால் முன்னேற்றப் பயணத்தின் ஆரம்பமாக இதனைக் கொள்ளலாம்.

கடல் அனர்த்தம் ஏற்பட்டு மூன்று வாரத்துக்குள் நாட்டை கட்டியெழுப்புவதற்கான திட்டத்தை ஆரம்பித்தமைக்கு அனைவரும் பெருமையடையவேண்டும். சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு, வீடுகளை இழந்தவர்களுக்கு புதிய வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படும்.

பேரழிவைச் சந்தித்த நகரங்களையும், (12 ஆம் பக்கம் பார்க்க)

# சமாதான முயற்சிகள் தொடர்பாக நோர்வே குழு பேச்சு நடத்தாது!

## சுனாமி அழிவுகள் பற்றியே பேசப்படும் என்கிறார் தூதரக அதிகாரி

(கொழும்பு)

நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் தலைமையிலான உயர்மட்டக் குழுவினர் இன்று கொழும்பு வந்து அரசாங்க மற்றும் விடுதலைப்

பேசப்படும் என்றும் கொழும்பிலுள்ள நோர்வே தூதரகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக நோர்வே தூதரகத்தின் பெண் பேச்சாளர் கருத்துத் தெரிவிக்கும்போது –

ஹில்ட் எவ்.ஜோன்சன் ஆகியோர் இன்று கொழும்பு வரவுள்ளனர்.

நான்கு நாட்கள் இலங்கையில் தங்கியிருக்கும் இந்தக் குழுவினர் – நாட்டின் பல்வேறு பகுதிகளுக்

# சுனாமி அழிவுகள் பற்றியே பேசப்படும் என்கிறார் தூதரக அதிகாரி

(கொழும்பு)

நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் தலைமையிலான உயர்மட்டக் குழுவினர் இன்று கொழும்பு வந்து அரசாங்க மற்றும் விடுதலைப் புலிகளின் உயர்மட்டத் தலைவர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளனர்.

இந்தச் சந்திப்புக்களின்போது சமாதான முயற்சிகள் குறித்துப் பேசப்படமாட்டாது என்றும் சுனாமியால் ஏற்பட்ட பாதிப்புக்களுக்கான உதவிகள் குறித்தே பேசப்படும் என்றும் கொழும்பிலுள்ள நோர்வே தூதரகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக நோர்வே தூதரகத்தின் பெண் பேச்சாளர் கருத்துத் தெரிவிக்கும்போது –

நோர்வே விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் நேற்று கொழும்பை வந்தடைந்துள்ளார். நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் சர்வதேச அபிவிருத்திக்கான அமைச்சர் ஹில்ட் எவ்.ஜோன்சன் ஆகியோர் இன்று கொழும்பு வரவுள்ளனர்.

நான்கு நாட்கள் இலங்கையில் தங்கியிருக்கும் இந்தக் குழுவினர் – நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று சுனாமியால் ஏற்பட்ட அழிவுகளை நேரில் பார்வையிடவுள்ளனர்.

அத்துடன் ஜனாதிபதி சந்திரிகா உள்ளிட்ட அரசாங்க உயர்மட்டத் தலைவர்களைச் சந்தித்துப் பேசும் நோர்வே தூதுக்குழுவினர் (12 ஆம் பக்கம் பார்க்க)

# மூன்று லொறி பொருட்கள் படையினரால் அபகரிப்பு!

கண்டி - மலையக தமிழர்களால் சேகரிக்கப்பட்டு திருகோணமலை மாவட்டத்தில் சுனாமி கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்கென திருகோணமலை மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகத்திற்கு அனுப்பப்பட்ட மூன்று லொறி நிறைந்த உணவுப் பொருட்கள் நேற்றும் இராணுவத்தினரால் பலாத்காரமாகப் பறித்து எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

நேற்று நண்பகல் சுயமாகச் செயற்படும் சில தொண்டர்களால் கண்டி மாவட்டத்தில் சேகரிக்கப்பட்டு மூன்று லொறிகள் நிறைந்த நிவாரணப்பொருட்கள் திருகோணமலைக்கு கொண்டுவரப்பட்டன. இதன்போது திருகோணமலை - அனுராதபுரம் சந்திப்பகுதியில் வைத்து இராணுவத்தினரால் தடுத்து நிறுத்தப்பட்ட மேற்படி லொறிகள், வந்தவர்களின் விருப்பத்திற்கு மாறாக திருகோணமலை கோட்டைப் பகுதிக்குச் சமீபமாக உள்ள மாவட்ட செயலகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் திருகோணமலை மாவட்ட அலுவலகத்திற்கு வழங்குவதற்காக மேற்படி நிவாரணப் பொருட்கள் கொண்டுவரப்பட்டதாக பொருட்களை எடுத்து வந்தவர்கள் இராணுவத்தினரிடம் தெரிவித்தனர்.

அதனை ஏற்கமறுத்த படையினர் அதனை மாவட்டச் செயலகத்திற்கு எடுத்துச் சென்றனர்.

மேற்படி சம்பவத்தை அறிந்த தமிழர் புனர்வாழ்வுக்கழக நிர்வாகிகள் மாவட்டச் செயலகத்துடன் தொடர்புகொண்டு இதுபற்றி முறையிட்டதை அடுத்து பறிக்கப்பட்ட மூன்று லொறி (12 ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவ போக்குவரத்தை மறித்து கொடிகாமத்தில் நேற்று போராட்டம்!



(யாழ்ப்பாணம்)

மிருசுவிலில் இராணுவ வாகனம் மோதி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்த சம்பவத்தைக் கண்டித்து - கொடிகாமம் சந்தியில் நேற்று மக்கள், எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றுக் காலை 10.30 மணியளவில் கொடிகாமம் சந்தியிலுள்ள அனைத்துக் கடைகளும் பூட்டப்பட்டு சந்தியின் குறுக்கே ரயர்கள் போட்டு எரிக்கப்பட்டு ட.மார் ஒருமணி நேரம் இராணுவத்தினரின் போக்குவரத்துக்கு தடை விதிக்கப்பட்டது.

இந்தச் சந்தர்ப்பத்தில் இந்தப் பாதை ஊடாக இராணுவத்தினர் சிலர் ட்ரக் வண்டியில் செல்ல முற்பட்டபோது - மறியலில் ஈடுபட்ட பொதுமக்களுக்கும் இராணுவத்தினருக்குமிடையே முறுகல்நிலை ஏற்பட்டது. இதன்போது இடம்பெற்ற கைகலப்பில் இரண்டு இராணுவத்தினர் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொதுமக்கள் மேற்படி போராட்டத்தில் ஈடுபட்டதன் காரணமாக கொடிகாமம் பகுதியில் காலை 10.30 மணியில் இருந்து நண்பகல் 11.30 மணிவரை இயல்பு நிலை பாதிக்கப்பட்டது.

எனினும் மாலையில் அப்பகுதி வழமைக்குத் திரும்பியது.இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ் மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் சம்பவ இடத்திற்குச் சென்று இது தொடர்பாக ஆராய்ந்தனர்.

# பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் மாணவர்கள் சிரமதானம்

சுனாமி கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பாடசாலை மாணவர்கள் சிரமதானப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

சுனாமி கடல் அனர்த்தத்தின் போது பாதிக்கப்பட்ட வடமராட்சி கரையோர பிரதேசங்களில் வீதிகள் மற்றும் வீடுகளை சிரமதானம் மூலம் துப்பரவு செய்து வருகின்றனர்.

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி ஆகிய பாடசாலைகளை சேர்ந்த மாணவர்கள் சிரமதானப் பணியில் ஈடுபட்டுள்ளனர். நேற்றைய தினம் கரவெட்டி விக் னேஸ்வராக் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள் துப்புரவுப்பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

சுனாமி கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களின் நலன்களை உணர்ந்து அந்த மக்களை மீள சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்டு வரும் சிரமதானப் பணிகளில் இணைந்துகொள்ள விரும்பும் பாடசாலைகளை வடமராட்சியில் அமைந்துள்ள யாழ். மாவட்ட புனர்வாழ்வுக் கழகச் செயலகத்தில் தமது விபரங்களை பதிவுசெய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (12)

# படையினர் வழங்கிய ஆடைகளை அழிப்பதற்கு சுகாதாரப் பகுதி தீர்மானம்

(வடமராட்சி)

சக்கோட்டை புனித சவேரியார் ஆலயத்தில் தங்கியுள்ள நலன்புரி நிலையங்களில் பாதிக்கப்பட்ட உடுபுடவைகள் பாவனைக்கு உதவாதவை என சுகதாரப் பிரிவினர் கண்டுபிடித்துள்ளனர்.

அப்பகுதி சுகாதாரப் பரிசோதகர்கள் படையினரால் வழங்கப்பட்ட உடைகளை பரிசோதனைக்குட்படுத்தியபோது அவற்றைப் பாவனைக்குப் பயன்படுத்த முடியாது என உறுதிப்படுத்திய பின்பு அவற்றை அழிப்பதற்கு தீர்மானித்துள்ளனர்.

இவ் உடுபுடவைகள் தொற்று நோய்களை உண்டுபண்ணக் கூடியவை என்ற அச்சத்தில் அவற்றினை உடனடியாக அழிக்கப்பட்டுள்ளதாக சுகாதார பரிசோதகர் ஒருவர் தெரிவித்தார். (14)

## பெரியபுராணம் தொடர்சொற்பொழிவு

(வடமராட்சி)

தொண்டைமனாறு சந்நிதியான் ஆசிரமத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில் சிரேஷ்ர விரிவுரையாளர் அ.குமாரவேல் சொற்பொழிவாற்றவுள்ளார்.

இதற்கான அறிமுகவுரையை தொண்டைமனாறு வீரகத்தி மகாவித்தியாலய ஆசிரியர் கு.ரவீந்திரன் வழங்குவார். (14)

## மணற்காட்டில் நகைகள் மீட்பு!

(வடமராட்சி)

சுனாமி கடல் அனர்த்தத்தின் போது பாதிப்படைந்த மணல்காட்டுப்பிரதேசத்தில் மீட்புப் பணியில் ஈடுபட்டிருந்த கொடிகாமம், சாவகச்சேரி ஆகிய பிரதேசசபை ஊழியர்கள் சங்கிலி, மற்றும் அட்டியல்களை கண்டெடுத்துள்ளனர்.

கண்டெடுக்கப்பட்ட நகைகள் மணல்காட்டு பங்குத் தந்தையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. . (12)

# கிளிநொச்சி வலயத்துக்கு தெரிவான மேலும் 36 பட்டதாரிகளின் விபரம்

(கிளிநொச்சி)

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவர்கள், விளையாட்டுத்துறை அமைச்சு செயலாளரினால் கிளிநொச்சி கல்வி வலயத்துக்கு பட்டதாரி பயிலுநர்களை பணிக்கமர்த்தல் நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் மேலும் 36 பட்டதாரி பயிலுநர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் தத்தமது நியமனக் கடிதங்களைப் பெறுவதற்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலகத்துக்கு சமுகமளித்து தத்தமது நியமனக் கடிதங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் கேட்டுக்கொண்டுள்ளார். இவர்களின் விபரங்கள் வருமாறு:

எஸ்.என்.பொன்ராணி (யாழ்ப்பாணம்), ரி.ஜெயலட்சுமி (நாச்சிமார் கோயிலடி, தாவடி), எஸ்.சுமித்ரா (நல்லூர்), ரி.தவவாசுகி (கொக்குவில் கிழக்கு), கே.பிரபாஞ்சலி (பிறவுண் வீதி), பி.யாழினி (நல்லூர்), ரி.தயாழினி (நவாலி வீதி), கே.தவமலர் (வதிரி), எஸ்.இராஜலட்சுமி (புத்தூர்), ஆர்.மதிரூபன் (உனாலி மேற்கு), எஸ்.இளங்கோதை (உரும்பிராய் வடக்கு), பி.சுதர்சினி (அளவெட்டி கிழக்கு), எஸ்.கமலாம்பிகை (கோப்பாய் தெற்கு), எஸ்.சிவஜோதினி (66, நந்தாவில் ஒழுங்கை), வி.பாலமதி (தாளையடி), கே.சச்சிதானந்தம் (தாளையடி), ரி.விஜயமனோகர் (ஆழியவளை), கே.சுதர்சன் (குடத்தனை), ரி.மனோகரன் (தளையடி), எஸ்.சந்திரகுமார் (தாளையடி), ரி.ஞானநந்தன் (செம்பியன் பற்று), எம்.மரியராசா (முள்ளியான்), எஸ்.ராஜ்குமார் (தாளையடி), எஸ்.மரியஸ்ரெலா (தாளையடி), கே.கலாரஞ்சினி (தாளையடி), எஸ்.வதனா (நாகர்கோயில்), பி.சுதர்ஜினி (நாகர் கோயில்), எஸ்.சிவமாலினி (குடத்தனை), எஸ்.சிதம்பரநாதன் (குடத்தனை), எவ்.மைக்கல் ஆன்சலோ (இன்னம்பலை), வி.ராஜலிங்கம் (முள்ளியான்), கே.ஆனந்தவாணி (தாளையடி), எஸ்.சுதாகரன் (முள்ளியான்), ரி.விஜேந்திரன் (வட்டுத்துறை வடக்கு), ஜி.ஜெயராஜினி (செம்பியன்பற்று), என்.கண்ணகுமார் (புலோலி).

## ஆசிரியருக்கான செயலமர்வு

(தென்மராட்சி)

தென்மராட்சி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை மறுதினம் 9.00 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் அத்தியாவாசியக் கற்றல் தேர்ச்சிகள் என்னும் கருப்பொருளில் கருத்துரைகள் இடம்பெறவுள்ளன.

இந்தச் செயலமர்வில் தரம் 5 இல் கற்பிக்கும் ஆசிரியர்கள் அனைவரையும் பங்குபற்றுமாறு தென்மராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர் செல்வராஜா தெரிவித்தார். (29)

## விவசாய சம்மேளனப் பொதுக்கூட்டம்

வட்டுக்கோட்டை சங்கரத்தை விவசாய சம்மேளன வருடாந்த பொதுக்கூட்டம் இன்று பி.ப 3.00 மணிக்கு அ.இரகுநாதன் தலைமையில் வட்டு.மத்தியகல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் கமநல சேவை உதவி ஆணையாளர் க.சுந்தரேசன் கலந்துகொள்ளவுள்ளார். (48)

## வல்லைப் பாலம் மூடப்படும்

வல்வைப் பாலம் திருத்தவேலை காரணமாக சனிக்கிழமை இரவு 8.30 மணிமுதல் மறுநாள் அதிகாலை 5.30 மணிவரை பாலத்திற்கூடான போக்குவரத்து தடைப்பட்டிருக்கும் என நொராட் செயற்திட்டப் பணிப்பாளர் தெரிவித்தார்.

# நலன்புரி நிலையங்கள் இயங்கும் பாடசாலைகளை இயக்க ஏற்பாடு

வடமராட்சியில் நலன்புரி நிலையங்களாக இயங்கிவரும் பாடசாலைகளை இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

இது தொடர்பாக நேற்று முன்தினம் வதிரியில் அமைந்துள்ள சுனாமி அனர்த்த விசேடசெயலணிக்குழு அலுவலகத்தில் ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது.

இதில் வடமராட்சி கல்விப் பணிபாளர் செல்வரட்ணம். மற்றும் நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் இடைத்தங்கல் முகாம்களை அமைத்தல், பாடசாலைகளிலிருந்து பாதிக்கப்பட்டவர்களை மாற்றுதல் தொடர்பாகவும் பாடசாலைகளைத் தொற்றுநீக்கி ஆரம்பிப்பது தொடர்பாகவும் ஆராயப்பட்டது. (14)

# வாகனங்களுக்கு வரி அறவீடுகளை கணினி மயப்படுத்தும் அறிமுகவிழா

மோட்டார் வாகன வருமானவரி அறவீடு தொடர்பான கணக்கு நடைமுறைகளை கணினிமயப்படுத்தும் அறிமுகவிழா நேற்றுக் காலை 10.00 மணிக்கு யாழ்.மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

கணினி மயப்படுத்தல் தொடர்பான இறுவட்டினை யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தார். இந்நிகழ்வில் வடக்கு கிழக்கு மாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஆணையாளர் ஆர்.செல்லத்துரை கலந்துகொண்டார்.

யாழ்.மாவட்ட பிரதேச செயலக கணக்காளர், நிதி உதவியாளர்கள் மற்றும் மோட்டார் திணைக்களத்தில் கடமைபுரியும் எழுதுநர்களும் இதில் கலந்துகொண்டனர். அறிமுக வைபவத்தினைத் தொடர்ந்து கணினி மயப்படுத்தல் தொடர்பான பயிற்சிக் கருத்தரங்கும் இடம்பெற்றது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இந்த நடவடிக்கையை கணினி மயப்படுத்துதல் தொடர்பான பயிற்சிநெறி முதன்முதலாக யாழ்.மாவட்டத்திலேயே நடைபெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

வடக்கு-கிழக்கு மாகாண சபையின் கீழ் இயங்கும் நீர்ப் திட்டத்தினரது அனுசரணையுடனேயே இக் கணினி மயப்படுத்தல் திட்டம் செயறபடுத்தப்படுவதுடன், இதன் மூலம் இதுவரை காலமும் வாகன வருமானவரி செலுத்தலில் இருந்து வந்த காலதாமதங்கள் நீங்கிவிடும் எனவும், இத்திட்டத்தின் முழுமையான பயனை இந்த ஆண்டு முதலேயே பெறமுடியும்.

கடந்த ஆண்டிலருந்து செயற்படுத்தும் வகையில் திட்டம் தயாரிக்கப்பட்டபோதும் வருட இறுதியில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் காரணமாக உரிய காலத்தில் பயிற்சியளிக்கமுடியாத நிலை ஏற்பட்டது என வடக்கு-கிழக்கு மாகாண மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் தெரிவித்தார். (113)

# வடக்கு-கிழக்கு பாடசாலைகளில் தரம் 6 முதல் ஆங்கில மொழியில் கற்கை 61 பாடசாலைகளில் அமுல்படுத்தப்படும்

## மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் தகவல்

(வடமராட்சி)

வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள 61 பாடசாலைகளில் இந்த ஆண்டு தொடக்கம் ஆங்கில மொழி மூல கற்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் வி.இராசையா தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் புதிய கல்விச் சீர்திருத்தத்தின்கீழ் நாடளாவிய ரீதியில் தெரிவுசெய்யப்பட்ட சில பாடசாலைகளில் ஆங்கிலமொழிமூலமான பாட போதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இத்திட்டத்தின்கீழ் தரம் ஆறு தொடக்கம் கல்விப் பொதுத்தராதர உயர்தரம் வரையான சகல பாடங்களும் ஆங்கிலமொழி மூலம் கற்பிக்கப்படவுள்ளதாக மேலதிக மாகாண கல்வி பணிப்பாளர் தெரிவித்துள்ளார். மாணவர்களுக்குத் தேவையான ஆங்கில மொழிமூலமான பாடநூல்களை தேசியகல்வி நிறுவகத்தின் உதவியுடன் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்புக்களை கல்வி அமைச்சு வழங்கவுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் 57 அரசாங்க பாடசாலைகளிலும், 04 தனியார் பாடசாலைகளிலும் பரீட்சார்த்த அடிப்படையில் ஆங்கில மொழிமூலம் கற்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளது. (17)

## கொடிகாமம் பகுதியல் எறிகணைகள் மீட்பு

(வடமராட்சி)

கொடிகாம் பகுதியில் தனியாருக்குச் சொந்தமான காணி ஒன்றினைப் பண்படுத்தியபோது நிலத்தினுள் புதைந்து கிடந்த மூன்று எறிகணைகள் மீட்கப்பட்டுள்ளன.

இந்த எறிகணையைக் கண்ட காணிச் சொந்தக்காரர் மிதிவெடி அகற்றும் பிரிவினருக்கு தகவல் கொடுத்ததையடுத்து வெடி பொருடகள் மீட்கப்பட்டன. மீட்கப்பட்ட வெடிபொருட்கள் வெடிக்கும் நிலையில் இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.


## அதிபர் தேவை

## சர்வதேசப் பாடசாலை, கிளிநொச்சி

அனுபவம், தகைமை வாய்ந்தவர்களிடம் இருந்து ஆங்கில மொழியில் இயங்கிவரும் எமது சர்வதேசப் பாடசாலையில் கடமையாற்ற அதிபர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் எதிர்வரும் 31.01.2005 அன்று அல்லது அதற்கு முன் எமக்குக் கிடைக்கக்கூடியதாக கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**பணிப்பாளர்,**
**சர்வதேசப் பாடசாலை,**
**கிளிநொச்சி.**

(சி-3616)


## சிறு விளம்பரம்

### காணவில்லை

பரஞ்சோதி மதியழகன், குரும்பசிட்டி புலோலி வடமேற்கு, பருத்தித்துறை என்பவரது ஆள்அடையாள அட்டை 10.01.2005 அன்று ஸ்கந்தபுரம் ஊடாக மல்லாவி சென்ற பேருந்தில் சென்றபோது தவறவிடப்பட்டுள்ளது. இதனைக் கண்டெடுத்தவர்கள் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சியில் *(T.P. 228 5781)* ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கிறார். (810)












# சுனாமியால் பலியானோர் தொகை திடீரென 7 ஆயிரத்தால் அதிகரிப்பு!

## அரசுக்குள் முரண்பாடு

தமிழர் தாயகப்பகுதிகள் அடங்கலாக, இலங்கையில் சுனாமி கடற்கொந்தளிப்பால் பலியானோர் தொகை குறித்து அரசுக்குள் முரண்பாடான நிலை தோன்றியுள்ளது.

பலியானோர் தொகையை மக்கள் பாதுகாப்பு அமைச்சு - கடந்த திங்கட்கிழமை சடுதியாக 7 ஆயிரத்தால் அதிகரித்து சுனாமியால் இலங்கையில் பலியானோர் தொகை 38,195 என அறிவித்தது.

இந்தத் திடீர் அதிகரிப்பு பல மட்டங்களிலும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. எங்கிருந்து இந்தத் திடீர் எண்ணிக்கை வந்தது என்ற கேள்வி எழுந்தது.

பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணங்கள் குறித்த பல்வேறு அறிவித்தல்களும் வெளியிடப்பட்டு வரும் நிலையில், இந்த எண்ணிக்கை அதிகரிப்பு பல்வேறு சந்தேகங்களை வேறு பலரிடமும் எழுப்பியுள்ளது.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் ஜனாதிபதியின் கீழ் இயங்கும் தேசிய நடவடிக்கைகளுக்கான மையம் - ஒருவரது இறப்பு இருமுறை கணக்கில் பதியப்பட்டது. பல்வேறு அமைப்புக்கள் ஒரே தகவலைத் திரட்டியது போன்ற காரணங்களே இவ்வாறு எண்ணிக்கை திடீரென உயர்ந்ததுக்குக் காரணம்.

ஆனால், பலியானோர் தொகை 30,920 ஆகவே தொடர்ந்தும் இருக்கிறது என செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தத் தொகையில் இறப்பு உறுதிப்படுத்தப்படாமல், காணாமல் போனோர் என பட்டியலிடப்பட்டோரையும் - இறப்பிற்கான பட்டியலில் உள்ளடக்கியதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பலியானோர் தொகை 25,898 என இராணுவ வட்டாரங்களை மேற்கோள்காட்டி, பிறிதொரு செய்தி வெளியாகியுள்ளது.

அத்துடன், சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டு, 10 லட்சம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர் எனத் தெரிவித்து வந்த அரசு, தற்போது இடம்பெயர்ந்து தங்கியுள்ளோர் 4,31,224 பேரென அறிவித்துள்ளது.

பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணங்கள் - நிவாரண அட்டை மூலம் வழங்கப்படும் என்ற அறிவுறுத்தலும் தற்போது வெளியாகியுள்ளது.

இதேவேளை, மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜா, வடக்கு-கிழக்கில் இறந்தோர் தொகை 8 ஆயிரம் என்றும், அந்தத் தொகை மேலும் அதிகரிக்கலாம் எனவும் தெரிவித்துள்ள 'கருத்து மேலும் குழப்பங்களை வலுப்படுத்தியுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் மட்டும் 11 ஆயிரம் பேரின் இறப்பு ஏற்கனவே உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், நிவாரணங்களில் பாகுபாட்டை கைக்கொள்ளவே அரசமட்டத்தில் பல்வேறு புள்ளிவிபரங்களும் வெளியிடப்பட்டு, வேண்டுமென்றே குழப்பங்கள் விளைவிக்கப்படுகின்றனவா? என்ற சந்தேகம் நிவாரண அமைப்புக்களிடம் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இதேவேளை, இதுவரை 58 நாடுகளிலிருந்து 255 விமானங்களில் உடனடி நிவாரணப் பொருட்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும், பல கப்பல்களிலிருந்து பெருமளவு நிவாரணப் பொருட்கள் இறக்கப்பட்டுள்ளதாகவும், இவற்றின் விபரம், இவை பகிர்ந்ளிக்கப்பட்ட முழுமையான விபரம் என்பதைக்கூட அறிய முடியாமல் உள்ளதாகவும் தெரியவருகிறது.

### விமான நிலையத்தில் பரபரப்பு

கடந்த வெள்ளிக்கிழமை பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச விமான நிலையத்தில் கைப்பற்றப்பட்ட குண்டு துளைக்காத பாதுகாப்பு கவசங்கள்- சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்டவை அல்ல என, பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. வேறு நாடொன்றுக்கு செல்ல வேண்டிய இந்தக் குண்டு துளைக்காத கவசங்கள் அடங்கிய பொதி, தவறுதலாக பிழையான ஒரு அறையில் வைக்கப்பட்டிருந்ததே இந்தப் பரபரப்புக்குக் காரணம்.

இந்த விவகாரத்தில் பிரிட்டன் நாட்டு தூதுவர் தலையிட்டு நிலைமையை அதிகாரிகளுக்கு விளக்கிய பின், பிரிட்டிஷ் எயார்வேய்ஸ் இந்தப் பொதியை மீளப்பெற்றுக்கொண்டது. (01)

### நடமாடும் வைத்தியசாலை அன்பளிப்பு

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மருத்துவ வசதிகளை வழங்க செக் குடியரசு நடமாடும் வைத்தியசாலையை அன்பளிப்புச் செய்துள்ளது.

விசேட விமானம் ஒன்றில் இந்த நடமாடும் வைத்தியசாலை கொண்டு வரப்பட்டது. (தே)

# இலங்கைக்கு உதவி வழங்க இந்தியா தயாராகவே உள்ளது

## நிருபமா ராவ் தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கைக்கு எந்தவேளையிலும் உதவி செய்வதற்கு - இந்திய அரசாங்கமும், மக்களும் தயாராக இருப்பதாக இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபமா ராவ் தெரிவித்தார்.

சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, 130 தொன் நிவாரணப் பொருட்களை ஏற்றிக்கொண்டு சமர் எனப்படும் கப்பல் கடந்த திங்கட்கிழமை கொழும்பை வந்தடைந்தது.

இந்த நிவாரணப் பொருட்களை- சுகாதாரத்துறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவிடம் கையளித்து உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

இத்தகைய அனர்த்தம் ஏற்பட்ட வேளை - இந்திய அரசாங்கமும், மக்களும் இலங்கைக்கு உதவவதில் மிகுந்த விருப்பம் கொண்டுள்ளனர்.

இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவே இதற்குக் காரணமாகும். இலங்கை எமது நெருங்கிய நட்பு நாடு. எமது அயல்நாடான இலங்கையிலுள்ள மக்கள் - இந்த அனர்த்தம் காரணமாகத் துன்பப்படும்வேளை, இந்திய மக்களின் நல்லெண்ணத்தை வெளிப்படுத்த வேண்டியுள்ளது.

இந்த நாட்டுச் சிறுவர்களையும் நாம் மறந்துவிடவில்லை. அவர்களுக்குத் தேவையான புத்தகப் பைகளை நாம் கொண்டுவந்துள்ளோம்.

இந்திய மக்களும், அரசாங்கமும் இலங்கைக்கு எப்பொழுதும் உதவத் தயாராக இருப்பதை நான் மீண்டும் கூறிக்கொள்ள விரும்புகிறேன் எனத் தெரிவித்தார்.

இந்தக் கப்பலில் மருந்துகள், உணவுப் பொருட்கள், கட்டடப் பொருட்கள், பாடசாலை உபகரணங்கள் போன்றன கொண்டு வரப்பட்டுள்ளன.

சுனாமி அனர்த்தம் ஏற்பட்ட பின்னர், இந்திய அரசாங்கம் இதுவரை 500 மெற்றிக்தொன்னுக்கும் அதிகமான மருந்துகள், உணவுப் பொருட்கள் மற்றும் உடுபுடவைகள் ஆகியவற்றை 12 கப்பல்களிலும், 14 விமானங்களிலும் அனுப்பி வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (தே)

### இந்த மாதச் சம்பளம் இன்றே கிடைக்கும்

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களுக்கான இந்த மாத சம்பளத்தை இன்றே வழங்கக்கூடியதாக இருக்கும் என்று, திறைசேரி நடவடிக்கைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஜனவரி மாதச் சம்பளத்தை 25 ஆம் திகதி வழங்கத் திட்டமிட்டிருந்த போதிலும், 24 ஆம் திகதி திங்கட்கிழமை அரச விடுமுறை தினமாதலால், சம்பளத்தை முன் கூட்டியே வழங்கத் தீர்மானித்ததாக, திணைக்களம் வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திறைசேரிப் பணிப்பாளர் நாயகத்தால் ஒப்பமிடப்பட்ட சுற்றறிக்கை - சகல அமைச்சின் செயலாளர்களுக்கும், திணைக்களத் தலைவர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# பிரதித்தலைவர் பதவியிலிருந்து விலகிக்கொள்வதற்குத் தயார்!

## கரு ஜெயசூரிய தெரிவிப்பு



ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித்தலைவர் கரு ஜெயசூரிய மீது கட்சியின் சில தலைவர்கள் விமர்சனம் தெரிவித்ததையடுத்து, தான் அந்தப் பதவியிலிருந்து விலகிக் கொள்ளத் தயாராக இருப்பதாகத் தெரிவித்தார்.

கொழும்பில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கை வகுப்பு செயற்குழுக் கூட்டத்திலேயே கரு ஜெயசூரிய இவ்வாறு தெரிவித்தார்.

இறந்துபோனவர்கள் மீது அரசியல் நடத்துவதற்கு தான் விரும்பவில்லை என்றும் கரு ஜெயசூரிய தெரிவித்தார்.

ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் நடைபெறும் அனைத்து கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் - கரு ஜெயசூரிய கலந்துகொள்வது குறித்து முன்னாள் அமைச்சர்களான ராஜித சேனாரத்ன மற்றும் கபீர் காசிம் ஆகியோரால் தெரிவிக்கப்பட்ட விமர்சனங்களுக்குப் பதிலளிக்கும் வகையிலேயே கரு ஜெயசூரிய இந்தக் கருத்தை வெளியிட்டார்.

கட்சி உயர்மட்டத் தலைவர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளையே - தான் அனர்த்த முகாமைத்துவ கூட்டத்தில் தெரிவித்துள்ளதாகவும், இந்த விடயம் தொடர்பாக தன்மீது தேவையற்ற விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருவது, கட்சியைப் பிளவுபடுத்திவிடும் என்றும் கரு ஜெயசூரிய மேலும் தெரிவித்தார். (01)

# இராஜதந்திரிகளின் வருகையால் வெளிநாட்டு உதவிகள் அதிகரிப்பு

வெளிநாட்டு இராஜதந்திரிகள் இலங்கைக்கு தொடர்ச்சியாக விஜயம் செய்து வருவதால், இலங்கைக்கான அந்நிய உதவிகள் அதிகரித்துள்ளதாக, பிரதி வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் விஸ்வவர்ணபால தெரிவித்தார்.

இதற்கு வெளிநாட்டு அமைச்சு உலக நாடுகளுடன் கொண்டிருந்த உறவும், அமைச்சின் சிறப்பான செயற்பாடுகளுமே காரணம்.

கிடைக்கும் நிதிகளை உரிய முறையில் பயன்படுத்த, அரசாங்கம் மற்றும் அதனோடுகூடிய அமைப்புக்கள் நடவடிக்கை எடுத்துள்ளது எனத் தெரிவித்தார்.

இதேவேளை, இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள ஆய்வாளரும், விரிவுரையாளருமான தயான் ஜெயதிலக -

வெளிநாட்டு அமைச்சின் சிறப்பான செயற்பாடுகள் உண்மையானது. எனினும், அரசாங்கங்கள் என்பதற்கு அப்பால் உலகநாடுகளின் மக்களோடு, இலங்கை மக்கள் கொண்டுள்ள உறவு நிலையே முக்கிய காரணமாக அமைகிறது.

இதற்குச் சிறந்த உதாரணமாகப் பிரித்தானிய மற்றும் இத்தாலிய மக்கள் வழங்கிய உதவித்தொகை என்பது அந்த நாட்டு அரசாங்கங்கள் வழங்கிய தொகையைவிட அதிகமானது எனச் சுட்டிக்காட்டினார். (01)

# நீதிமன்றை அவமதித்ததாக சண்டேலீடர் ஆசிரியரை கைதுசெய்ய பிடியாணை!

(கொழும்பு)

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டின் பேரில் சண்டேலீடர் பத்திரிகை ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவை உடனடியாகக் கைது செய்யுமாறு, மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்றுமுன்தினம் பிடியாணை பிறப்பித்தது.

இலங்கை கிரிக்கெட் சபையின் முன்னாள் தலைவர் திலங்க சுமதிபால தாக்கல் செய்த வழக்கு - விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, முதலாவது பிரதிவாதியான லசந்த விக்கிரமதுங்க நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை.

அவர் வெளிநாடு சென்றிருப்பதால், நீதிமன்றத்துக்கு வரமுடியவில்லை என்று லசந்த விக்கிரமதுங்கவின் சட்டத்தரணி தெரிவித்தார்.

சண்டேலீடரின் ஆசிரியர் என்பதால், விக்கிரமதுங்கவுக்கு தனியான சட்டம் அமுல்செய்யமுடியாது என்று, திலங்க சுமதிபாலவின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி தெரிவித்தார்.

இந்த வாதத்தை கவனத்தில் எடுத்துக்கொண்ட நீதியரசர் சிறிஸ் கந்தராஜா - நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு முன், நீதிமன்றத்தின் அனுமதி பெறாது சென்றிருப்பதால், லசந்த விக்கிரமதுங்கவுக்கு பிடியாணை பிறப்பித்தார்.

மனுமீதான விசாரணை பெப்ரவரி 9 ஆம் திகதி மீண்டும் நடைபெறவுள்ளது.

# கல்விச் செயற்பாடுகளை ஆரம்பிக்க யுனிசெப் நிறுவனம் நடவடிக்கை

(கொழும்பு)

சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட திருகோணமலை மாவட்டப் பாடசாலைகளின் கற்றல், கற்பித்தல்சார் செயற்பாடுகளை இயல்புநிலைக்குக் கொண்டுவருவதற்கான துரித நடவடிக்கைகளை யுனிசெப் நிறுவனம் ஆரம்பித்துள்ளது.

பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு உடனடியாகத் தேவைப்படும் பாடசாலைச் சீருடைகள், பாடசாலை உபகரணங்கள் என்பவற்றை வழங்குவதுடன், பாதிக்கப்பட்ட மாவட்டத்திலுள்ள 60 பாடசாலைகளுக்கும், பாதிக்கப்பட்ட பொதுமக்கள் தங்க வைக்கப்பட்டுள்ள நலன்புரி நிலையங்களாகப் பயன்படுத்தப்பட்ட பாடசாலைகளுக்கும் கற்றல், கற்பித்தல்சார் உபகரணங்களை வழங்கும் நடவடிக்கைகளையும் யுனிசெப் அமைப்பின் திருகோணமலை மாவட்ட அலுவலகம் ஆரம்பித்துள்ளது.

சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட பாடசாலைக் கட்டடங்களைப் புனரமைப்புச் செய்யவும், பாதிக்கப்பட்ட பாடசாலைத் தளபாடங்களை வழங்கவும் தேவையான நிதியை யுனிசெப் அமைப்பு திருமலை மற்றும் மூதூர் வலயக் கல்வி பணிமனைகளுக்கு கொடுக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை முற்றாகப் பாதிக்கப்பட்ட பாடசாலைக் கட்டடங்களுக்குப் பதிலாக, தற்காலிக தீர்வாக கூடாரங்களை அமைத்து, பாடசாலைகளைத் தற்காலிகமாக இயங்கச் செய்யும் நடவடிக்கையையும் நேற்றுமுன்தினம் முதல் யுனிசெப் ஆரம்பித்துள்ளது. (10)

VB SERIES AUSTRALIA, PAKISTAN, WEST INDIES

## வி.பி.முக்கோணத் தொடர்

# மேற்கிந்தியத் தீவுகள் அணியை பாகிஸ்தான் வெற்றிகொண்டது!



வி.பி கிண்ணத்துக்கான முக்கோண ஒருநாள் போட்டித் தொடரில் - நேற்று பிறிஸ்பேன் நகரில் நடந்த ஆட்டத்தில் ஆறு விக்கெட்டுக்களால் மேற்கிந்தியத் திவுகள் அணியை வீழ்த்தி பாகிஸ்தான் அணி முதல் வெற்றியைப் பெற்றது.

அவுஸ்ரேலியாவில் நடைபெற்றுவரும் வி.பி முக்கோண ஒருநாள் போட்டிதொடரில்- அவுஸ்ரேலியா, மேற்கிந்தியத் தீவுகள், பாகிஸதான் அணிகள் விளையாடி வருகின்றன.

அதில் ஏற்கனவே நடந்த இரண்டு போட்டிகளில் பாகிஸ்தான் மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் அணிகளை அவுஸ்ரேலியா வீழ்த்தியது. இந்த நிலையில் நேற்று மூன்றாவது ஆட்டம் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கும், பாகிஸ்தான் அணிக்கும் இடையில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடுமாறு மேற்கிந்தியத் தீவுகள் அணியைக் கேட்டுக்கொண்டது. இதற்கமைய கிறிஸ் கைல் - ஹின்ட்ஸ் ஜோடி களமிறங்கியது. இந்த இரு வீரர்களும் இலகுவில் வீழந்துவிடாமல் ஆடிக்கொண்டிருந்தனர். கைல் அடித்து ஆடினாலும் ஹின்ட்ஸ் பந்துகளை வீணடித்துக் கொண்டிருந்தார்.

இந்த நிலையில் பெரும் போராட்டத்துக்குப் பின்னர் - ஸ்கோர் 86 ஆக இருந்த போதுதான் முதல் விக்கெட்டை பாகிஸ்தான் அணியால் வீழ்த்தமுடிந்தது. 62 பந்துகளில் 3 பவுண்டரிகளுடம் 29 ஓட்டங்களை எடுத்திருந்த ஹின்ட்ஸ் - மொகமட் ஹபீஸ் வீசிய பந்தை அடித்து ஆடமுற்பட்டபோதே சல்மான பட்டிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இதையடுத்து சர்வான் களமிறங்கி கைலுடன் இணைந்துகொண்டார். இவர்கள் இருவரும் பொறுப்புடன் ஆடி ஓட்டங்களைக் குவித்தனர். இதனால் அணியின் ஸ்கோர் உயர்ந்து 149 ஐத் தொட்டபோது - அடுத்த விக்கெட் அஸார் மஹ்மூத்தால் வீழ்த்தப்பட்டது.

99 பந்துகளில் 7 பவுண்டரிகளுடன் 82 ஓட்டங்களை எடுத்திருந்த நிலையில் இரண்டாவது விக்கெட்டாக வீழ்த்தப்பட்டார் கிறிஸ் கைல். இதைத் தொடர்ந்து அணித் தலைவர் பிரைன் லாரா மைதானத்துக்கு வந்தார். சர்வான் - லாரா ஜோடியும் பாகிஸ்தான் அணியின் பந்துவீச்சாளர்களுக்குப் பெரும் சவாலாக, இலகுவில் வீழ்த்தப்படமுடியாதவர்களாக விளங்கினர்.

இதேவேளை - பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளர் சொகைப் அக்தர் ஆறாது ஓவரில் பந்துவீசியபோது காயமடைந்தார். பெரும் நெருக்கடிக்கு முகங்கொடுத்த பாகிஸ்தான் அணி பந்துவீச்சாளர்களுக்கு லாரா பெரும் தலையிடியாக இருந்து ஓட்டங்களைக் குவித்துக்கொண்டிருந்தார்.



இந்த நிலையில் ஸ்கோர் 209 ஆக உயர்ந்தபோது நவீட் உல் ஹசன் வீசிய பந்தை தூக்கி அடித்த லாரா - மொகமட் ஹபீக்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.


லாரா 30 பந்துகளில் 6 பவுண்டரிகள் ஒரு சிக்ஸருடன் 39 ஓட்டங்களைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. அடுத்ததாக பவல் களமிங்கினார். ஆனால், அவர் முதலாவது பந்தை எதிர்கொண்டு ஆடமுற்பட்டு கம்ரன் அக்மலிடம பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அவரது விக்கெட்டை நவீட் உல் ஹசன கைப்பற்றினார்.

தொடர்ந்து ஆடுவதற்காக சந்தர்போல் களமிறங்கியபோது ஆட்டம் மீண்டும் சூடு பிடிக்கத் தொடங்கியது. ஆனால், ஆட்டநேர முடிவில் கடைசிப்பந்தை அடித்து ஆடமுற்பட்ட சர்வான் ஆட்டமிழந்தார். சர்வான் 91 பந்துகளில் 4 பவுண்டரிகள், ஒரு சிக்ஸருடன் 76 ஓட்டங்களைப் பெற்றார். அவரது விக்கெட்டை அஸார் மஹ்மூத் கைப்பற்றினார். ஆட்டநேர முடிவில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 5 விக்கெட் இழப்புக்கு 273 ஓட்டங்களைப் பெற்றது. சந்தர்போல் ஆட்டமிழக்காமல் 25 ஓட்டங்களை 22 பந்துகளில் எடுத்தார்.

நவீட் உல் ஹசன் 2 விக்கெட்டுக்களையும், அசார் மஹ்மூத், நபீஸ், ரசாக் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இதையடுத்து பாகிஸ்தான் அணி பதிலுக்குத் துடுப்பெடுத்தாட ஆரம்பித்தது. சல்மாட பட் - கம்ரன் அக்மல் ஜோடி அடித்து ஆடமுற்பட்டது. ஸ்கோர் 28 ஆக உயர்ந்த போது சல்மான் பட் ஆட்டமிழந்தார். இவர் 18 பந்துகளில் 10 ஓட்டங்களைப் பெற்றார். டிலானின் பந்துவீச்சில் அவர் போல்டானார்.

அடுத்து வந்த மொகமட் ஹபீபும் நீண்ட நேரம் நிலைத்து நிற்கவில்லை. 9 பந்துகளில் 2 ஓட்டங்களை மட்டுமே எடுத்த





நிலையில் அவரும் ஆட்டமிழந்தார். அவரது விக்கெட்டையும் டிலானே கைப்பற்றினார். 36 பந்துகளுக்குள் 2 விக்கெட்டுக்கள் வீழந்த நிலையில் சொகைப் மலிக் களமிறங்கினார். கம்ரன் அக்மல் - சொகைப் மலிக் ஜோடி பொறுப்புடன் ஆடியது. இதனால் ஓட்டங்கள் தொடர்ந்து அதிகரித்துக்கொண்டிருந்தது.

ஸ்கோர் 159 ஐ தொட்டபோது - சொகைப் மலிக்கின் விக்கெட் வீழ்த்தப்பட்டது. பிறாட்சோ வீசிய பந்தில் ஆட்டமிழந்த இவர், 60 பந்துகளை எதிர்க்கொண்டு 60 ஓட்டங்களை எடுத்தார். இதில் 6 பவுண்டரிகளும் அடங்கும்.

இதைத் தொடர்ந்து இன்சமாம் உல் ஹக்



4 ஆவது விக்கெட்டாகக் களமிறங்கினார். இவர் அணியின் வெற்றிக்காக அடித்து ஆடி ஓட்டங்களைக் குவிக்கத் தொடங்கினார். இதே வேளை எதிர்முனையில் இருந்த கம்ரன் சதத்தைக் கடந்தார்.

ஸ்கோர் 239 ஐ எட்டியபோது கம்ரன் அக்மல் ஆட்டமிழந்தார். 125 பந்துகளை எதிர்கொண்டு 124 ஓட்டங்களை அவர் பெற்றுக்கொடுத்தமை குறிப்பிடத்தக்கது. இவரது விக்கெட்டை பிறாட்சோ கைப்பற்றினார். அடுத்து யூசுப் யுகானா களமிறங்கினார். ஆனால், அவர் அடித்து ஆடாமல் பந்துகளை வீணடித்துக்கொண்டிருந்தார்.

47 ஓவரிலேயே பாகிஸ்தான் அணி வெற்றி இலக்கை எட்டியது. 4 விக்கெட் இழப்புக்கு 274 ஓட்டங்களைப் பெற்று 7 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. இன்சமாம் 51 பந்துகளில் 62 ஓட்டங்களையும், யுகானா 22 பந்துகளை எதிர்கொண்டு 9 ஓட்டங்களைப் பெற்றநிலையில் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பிறாட்சோ, டிலான் ஆகியோர் தலா இரணடு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். ஆட்டநாயகனாக கம்ரன் அக்மல் தெரிவுசெய்யப்பட்டார்.

விளையாட்டு

# ரஷ்ய ரெனிஸ் வீராங்கனைமீது ஊக்கமருந்து குற்றச்சாட்டு!



ரஷ்ய ரெனிஸ் வீராங்கனை ஸ்வெட்லானா குஸ்னெட்சோவா ஊக்கமருந்தைப் பயன்படுத்தியதாக தகவல் வெளியாகியுள்ளது.

பெல்ஜியத்தில் கடந்த டிசெம்பரில் நடைபெற்ற காட்சி ரெனிஸ் போட்டி ஒன்றில் பங்கேற்றபோது குஸ்னெட்சோவா மட்டுமல்லாது, வேறுசில 3 வீரர்களிடமும் ஊக்கமருந்து ஆய்வுக் குழுவினர் பரிசோதனை மேற்கொண்டுள்ளனர்.

அப்போது குஸ்னெட்சோவாவின் சிறுநீரில் 'எபிடெரின்' எனும் ஊக்கமருந்து இருப்பது தெரியவந்துள்ளது. இது குறித்து பெல்ஜியத்தில் உள்ள அவரது விலாசத்துக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது என பெல்ஜியத்தின் விளையாட்டுத்துறை அமைச்சர் கிளாட் ஈர்டெகன்ஸ் தகவல் வெளியிட்டுள்ளார்.

ஆனால் இக்குற்றம் நீரூபிக்கப்படாதவரை குஸ்னெட்சோவா குற்றமற்றவர்தான். அவர் ஒருவேளை மீண்டும் பரிசோதனை செய்யச் சொல்லலாம் என அவர் தெரிவித்தார். உலக மகளிர் தரவரிசையில் 5 வது இடத்தில் உள்ள குஸ்னெட்சோவா கடந்த முறை யு.எஸ்.ஓபன் பட்டத்தை வென்றவர்.

தற்போது மெல்பேர்னில் அவுஸ்ரேலிய ஓபனில் விளையாடிவரும் குஸ்னெட்சோவா, இந்தச் செய்தியை அறிந்ததும் அதிர்ச்சி அடைந்தார். அத்துடன் அந்தக் குற்றச்சாட்டை மறுக்கவும் செய்துள்ளார்.

இதற்கிடையே இந்தச் செய்தியை வெளியிட்டுள்ள அமைச்சர் மீது உலக மகளிர் ரெனிஸ் சங்கம் (டபிள்யூ.டி.ஏ) கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளது.

"அவர் உட்கொண்டதாகக் கூறப்படும் மருந்து தடைசெய்யப்பட்ட வகையைச் சேர்ந்ததும் கிடையாது. குஸ்னெட்சோவாவை கேவலப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் இரகசியமாகப் பாதுகாக்க வேண்டிய இச் செய்தியை பொதுமக்களுக்கு அந்த அமைச்சர் வெளியிட்டுள்ளார்.

எனது வாழ்க்கையில் இதுமாதிரி வெட்கமில்லாத, பொறுப்பற்ற விளையாட்டு அதிகாரியை நான் பார்த்ததே கிடையாது" என மகளிர் ரெனிஸ் சங்கத்தின் முதன்மை அதிகாரி லாரி ஸ்காட் செய்திக் குறிப்பில் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

# அவுஸ்ரேலிய ஓபன் ரெனிஸ் காலோஸ் மோயா தோல்வி!

(மெல்போர்ன்)

அவுஸ்ரேலிய ஓபன் ரெனிஸ் போட்டியில் ரோஜர் பெடரர், ஆந்ரே அகாஷி, செரீனா வில்லியம்ஸ், மரியா ஷரபோவா போன்ற முன்னணி வீரர், வீராங்கனைகள் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினர்.

நான்காம் நிலை வீராங்கனையான ரஷ்யாவின் இளம் மரியா ஷரபோவா, பல்கேரியாவின் செசில் கராடன்ட்செவாவைச் சந்தித்தார். விறுவிறுப்பாக நடந்த இந்தப்போட்டியில் ஷரபோவா 6-3, 6-1 என்ற நேர்செட்களில் எளிதாக வெற்றிபெற்றார்.

இவரது சக நாட்டு வீராங்கனைகளான ஸ்வெட்லானா குஸ்னெட் சோவா 6-1, 6-1 என்ற செட்களில் அமெரிக்காவின் ஜெசிகா கிர்க்லான்டையும், வெரா ஜுவோனரியா 6-4, 6-2 என்ற செட்களில் சீனாவின் லூ நன்னனையும், நாதியா பெட்ரோவா 6-1, 6-2 என்ற செட்களில் விர்ஜின் ரஸானோவையும் வீழ்த்தினர்.

ஏழாம் நிலை வீராங்கனையான அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் 6-1, 6-1 என்ற நேர் செட்களில் பிரான்ஸின் கேமிலி பின்னையும், பிரான்ஸின் அமெலி மவுரிஸ்மோ 6-2, 6-3 என்றசெட்களில் அவுஸ்ரேலியாவின் சமந்தாவையும் வென்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.

ஆண்கள் ஒற்றையர் முதல் சுற்றில் முதல் நிலை வீரரான சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெரடர், பிரான்ஸின் பாப்ரிஸ் சான்டிரோவை சந்தித்தார். பெடரரின் வேகமான ஆட்டத்துக்கு சாண்டிரோ ஈடுகொடுக்கமுடியாமல் திணறினார். இறுதியில் பெரடர் 6-1, 6-1, 6-2 என்ற எளிய செட்களில் வெற்றிபெற்றார். இரண்டாவது சுற்றில் இவர், ஜப்பானின் தகோ சூசுகியை எதிர்கொள்கிறார்.

நான்கு முறை பட்டம் வென்ற அமெரிக்காவின் ஆந்ரே அகாசி 6-4, 6-3, 6-0 என்ற நேர் செட்களில் ஜேர்மனியின் தியதர் கைன்ட்மேனை வீழ்த்தினார். ஆசியாவின் முதல் நிலை வீரரான தாய்லாந்தின் ஸ்ரீசாபன் 1-6, 6-2, 7-5, 6-4 என்ற செட்களில் சக நாட்டு வீரரான பொட்டிடோ ஸ்டாரேசை வென்றார்.

தவிர முன்னணி வீரர்களான ஆஜென்ரினாவின் கஸ்டன் காடியோ 7-6, 6-4, 6-3 என்ற செட்களில் அமெரிக்காவின் ஜஸ்ரின் கிமெல்ஸ்டாபையும், குரோசியாவின் மரியோ அன்சிக் 6-3, 6-2, 6-1 என்றசெட்களில் ஸ்பெயினின் ஆஸ்கரையும் வென்றார்.

ஆண்கள் பிரிவில் முன்னணி வீரர்களின் தோல்விப் பட்டியலில் ஸ்பெயினின் மோயா முதல் ஆளாக சேர்ந்துள்ளார். ஐந்தாம் நிலை வீரரான இவர் 5-7, 3-6, 6-3, 3-6 என்ற செட்களில் சக நாட்டு வீரரான கில்லர்மோ கார்சியா லோபசிடம் தோல்வியடைந்தார். பெண்கள் பிரிவில் ஜப்பானின் சுகியாமா 5-7, 4-6 என்ற செட்களில் - ஸ்லோவாகியாவின் மார்ட்டினா சுசாவிடமும், பிரான்ஸின் மேரிபியர்ஸ் 2-6, 2-6 என்ற செட்களில் ஸ்டீபனி கோஹனிடமும் தோல்வியடைந்தனர்.

## பட்மின்ரன் போட்டி

யாழ்.மத்திய கல்லூரி உள்ளரங்க விளையாட்டு கழகம் - மக்கள் வங்கி வடவலயத்தின் அனுசரணையுடன் நடாத்தும் பட்மின்ரன் போட்டி நாளை காலை 9 மணிக்கு கில்னர் மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது 16, 18 வயதுப் பிரிவினரான ஆண்களும், பெண்களும் இதில் கலந்துகொள்ளலாம்.

# மாணவர் சக்தி மாபெரும் சக்தி என்பதை பொங்குதமிழ் நிகழ்வு நிரூபணமாக்கியுள்ளது

## யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி




(யாழ்ப்பாணம்)

எமது இந்தப் போராட்டம் மக்களால் மக்களுக்காக மக்கள் ஆணைப்படி முன்னெடுக்கப்படுகின்ற ஒரு விடுதலைப் போராட்டம். இந்த விடுதலைப் போராட்டத்தின் பங்காளிகளாக ஒவ்வொரு மக்களும் இருக்கின்றதை உலகம் வியப்புடன் பார்த்துக்கொண்டிருக்கிறது என, யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பொங்குதமிழ் நிகழ்வின் 4 ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய இளம்பரிதி -

தமிழர்கள் இந்த மண்ணில், நீண்ட காலமாக ஓர் தாயகத்தில் வாழ்கின்ற வாழ்வுரிமையோடு, அரசியல் அந்தஸ்துக்களோடு, அதனோடு கூடிய சுயநிர்ணய உரிமைகளோடு வாழ்ந்து வந்த ஓர் தேசிய இனம். அந்தத் தேசிய இனத்தினுடைய தாயகத்தை, அவர்களுடைய சுயநிர்ணயத்தை, தேசிய தனித்துவத்தை மறுத்து அளிக்க முற்பட்டபொழுது, அந்த அழிவில் இருந்து தங்களைத் தாங்களே காத்து வாழ்வதற்கான இயற்கையான வாழ்வுரிமை போராட்டத்தை முன்னெடுத்து வருகிறோம்.

உலகில் நடைபெற்ற விடுதலைப் போராட்டங்களோடு, எங்களுடைய விடுதலைப் போராட்டத்தை வரலாற்றியலாளர்களும், அரசியல் ஆய்வாளர்களும் ஒப்பிட்டுப் பார்க்கின்றதையும், அதனுடைய தனித்துவங்கள், வேறுபாடுகள் தொடர்பாக ஆய்வு செய்வதையும் நாங்கள் அறிந்துகொண்டிருக்கிறோம்.

அந்த வகையில் நடந்து விடுதலைப் போராட்டங்களில் மக்களுடைய பங்களிப்பைக் கூடுதலாகக் கொண்டிருக்கின்ற விடுதலைப் போராட்டமாக, எங்களுடைய விடுதலைப் போராட்டம் இன்று சர்வதேச அரசியலாளர்களால் குறிப்பிடப்பட்டிருப்பது மிகவும் பெருமைக்குரிய விடயமாகும்.

அவ்வாறு மக்களுடைய பங்களிப்புடன் முன்னெடுக்கப்படுகின்ற விடுதலைப் போராட்டத்தை எப்போதுமே அழிக்க நினைக்கின்ற எதிரிகள் - அது ஓர் மக்கள் போராட்டம் அல்ல, அது ஓர் குழுவாக நடத்தப்படுகின்ற போராட்டம் என்ற கோட்பாட்டை உள்நாட்டிலும், சர்வதேச ரீதியாகவும் பிரசாரம் செய்து கோரமான யுத்த முனைப்பை எங்கள் மீது காட்டியுள்ளனர்.

யாழ்ப்பாணமே விடுதலைப் போராட்டத்தின் தளமாக செயற்பட்டதை நாம் அனைவரும் அறிவோம். அந்த வகையில் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதன் மூலம், விடுதலைப் போராட்டத்தின் முனைப்பை அழித்துவிடலாம், தமிழ்த் தேசியத்தை இல்லாதவாறு செய்துவிடலாம். இலங்கைத் தீவை சிங்கள பௌத்த பூமியாக்கிவிடலாம் என்ற ஓர் முடிவான வியூகங்களோடும், செயற்திட்டங்களோடும்தான் யாழ்ப்பாணத்தை எதிரிகள் முற்றுகையிட்டார்கள்.

விடுதலைப் போராட்டத்துக்குத் தளமாக இருப்பவர்கள் மக்கள். இதனை எதிரிகளோ, ஆக்கிரமிப்பாளர்களோ உணர்வதில்லை. ஆனால் போராட்டம் வெற்றி பெறுகின்ற பொழுதுதான் அந்த வரலாற்று உண்மையை உலகம் ஏற்றுக்கொள்கின்றது. எதிரிகளும் ஏற்றுக்கொண்டனர்.

வன்னியில் மக்கள் மீது விமானங்களின் குண்டுவீச்சுக்களும் இடைவிடாது தொடர்ந்துகொண்டிருந்த பொழுது - உணவுத் தடை, மருந்துத்தடை, தொடர்பாடல் துண்டிப்பு என ஒட்டுமொத்தமாக வாழ்வியல் நெருக்கடிகள் அங்கு நிகழ்த்தப்பட்டுக் கொண்டிருந்த நேரத்தில், உயிரைக் காப்பதற்காக மக்கள், போராளிகள் என எல்லோருமே உழன்று கொண்டிருந்தபொழுது - யாழ்பாணத்திலே இன்னோர் போர் முனை திறக்கப்பட்டது.

அதாவது மக்கள் மனங்களில் பயப்பீதி, மரணபீதி ஊட்டப்பட்டு மக்கள் தங்களுடைய செயற்பாடுகளையோ, கருத்துக்களையோ வெளிக்கொண்டுவரமுடியாத ஒரு இருள் நிலையை ஆக்கிரமிப்பாளர்கள் ஏற்படுத்தினர். இது எமது தாயகப்பகுதி அனைத்திலுமே ஏற்படுத்தப்பட்டது.

அந்த நேரத்தில் யாழ்ப்பாணத்து மக்கள் அமைதியாகவே இருக்கிறார்கள். அவர்கள் விடுதலைப் புலிகளின் போராட்டத்தின் மீது விருப்பைக் காட்டவில்லை. புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் குறைந்தளவு மக்களே இருக்கிறார்கள். அவர்களு நெருக்கடிக்குள்தான் இருக்கிறார்கள். அதாவது புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருந்து வெளியேறவே நினைக்கிறார்கள் என, இனவாதிகள் பொய்ப்பிரசாரங்களைச் செய்தனர்.

இதனால் சர்வதேச சமூகம் ஒரு கருத்தைக் கொண்டிருந்தது. அதாவது இலங்கையில் பயங்கரவாதப் போராட்டம்தான் நடக்கிறது. விடுதலைப் புலிகள் மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையிலேதான் இந்தப் போராட்டத்தை நடத்துகின்றனர்.

அவர்களை எதிர்கொள்கின்ற நிலையில் அரசாங்கம் முன்னேறிக் கொண்டிருக்கிறது. அவர்கள் குறிப்பிட்ட காலத்தினுள் வெற்றி கண்டுவிடுவார்கள் என்ற அடிப்படையில் சர்வதேசத்தின் கருத்தோட்டமும் - சர்வதேசமும் அதன் அடிப்படையிலே பொருளாதார, ஆயுத உதவிகளை அரசின் பக்கம் குவித்துக் கொண்டிருந்தன.

போராட்டத்தின் அனைத்துப் பக்கங்களையும் வெளிக்கொண்டு வந்த வரலாற்று நிகழ்வாக இந்த பொங்கு தமிழ் நிகழ்வு நிகழ்ந்ததை நான் என் உணர்வால் பார்க்கிறேன். அது தான் யதார்த்தமும், உண்மையும்.

எனவே - இந்தப் பொங்குதமிழ் நிகழ்வு அந்த நேரத்தில் எங்களுக்கு அவ்வாறான பயனைத் தந்தது என்றால் இங்கே இந்தப் பல்கலைக்கழக சமூகமும் பொங்கு தமிழ் நிகழ்வை முன்னெடுத்தபோது, போராளிகளான எங்களது உதடுகளிலே உதித்த பெயர் கஜன் என்ற பெயரும், பல்கலைக்கழக சமூகமும் என்ற பெயரும்தான்.

அதனால் போர்க்களத்திலே போராளிகளுடைய மனோபலமும் உறுதியானது. எங்களுடைய நம்பிக்கைகள் என்பது இன்னும் கட்டியெழுப்பப்பட்டது.

பொங்குதமிழ் நிகழ்வு என்பது போர்க்களத்திலே எங்களுக்கு மத்தியிலும் ஒரு நம்பிக்கையைத் தந்தது. அதே நேரத்தில் சர்வதேச ரீதியிலும் இந்தப் பொங்குதமிழ் என்பது ஒரு திருப்பத்தைத் தந்தது.

ஆயுத, பொருளாதார உதவிகளைச் சர்வதேசத்துக்கு வழங்கிய ஓர் பிழையான கருத்தோட்டத்திலிருந்து அந்தச் சர்வதேச சமூகத்தின் போக்கிலே, கண்ணோட்டத்திலே மாற்றம் ஒன்று ஏற்பட்டு, ஒரு திருப்பு முனை ஏற்பட்டது. பல்கலைக்கழக சமூகம்தான் ஒவ்வொரு இனங்களுடைய தேசியத்தை வெளிப்படுத்துகிறது.

அந்த வகையில் தமிழ் மக்களுடைய தேசியத்தை வெளிப்படுத்துகிற தலைமைத்துவமாக விளங்குகின்ற இந்த யாழ்ப்பாண பல்கலைக் கழகத்திலே ஆசிரிய, மாணவ, நிர்வாக சமூகங்களால் முன்னெடுக்கப்பட்ட இந்தப் பொங்குதமிழ் வெளிப்பாடு என்பது - சர்வதேசத்திலே இருந்த பிழையான கருத்தோட்டத்தில் மாற்றத்தை ஏற்படுத்தியது.

தமிழர்களுடைய தேசியத்துக்கு காரணமாகவிருந்த விடுதலைப் புலிகள் வலுவான அரசியல் நிலையையும், வலுவான போரியல் நிலையையும் இன்று பெற்றிருக்கிறார்கள்.

அந்தவகையிலே - இந்தப் பொங்குதமிழ் நிகழ்வுக்கு காரணமாக இருந்த அனைவரையும் இந்த இடத்திலே நினைவுகூருகிறேன். அவர்களுக்கு நானொரு போராளி என்ற அடிப்படையிலே தலை வணங்கி, அவர்களை நான் பாராட்டுகிறேன்.

மாணவர் சக்தி மாபெரும் சக்தி என்பதை இங்கு நிரூபணமாகவே கண்டோம். யாருடைய தீர்மானமும் இல்லாத மக்களுடைய தீர்மானமே மகத்தான தீர்மானம் என்பதை இந்தப் பொங்குதமிழ் நிரூபித்துள்ளது.

எனவே மானிட சக்தி என்பது கிளர்ந்தெழுகின்றபோது, மகத்தான சக்தி படைக்கப்படும். அந்த சக்தி தான் இங்கு தீர்மானத்தை எடுக்கும் என்பதைத் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஒரு முக்கிய கால கட்டத்தில் பல்கலைக்கழக சமூகம் தீர்மானித்தது. அதை நன்றியுணர்வுடன் நாம் பார்க்கிறோம் எனத் தெரிவித்தார்.


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

இரண்டாவது அகவையில்



பெயர் : தி.தனுஞ்சிகா
முகவரி : மீசாலை.

மூன்றாவது அகவையில்



பெயர் : வி.சாருஜயன்
முகவரி : உரும்பிராய் மேற்கு.

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :---------------------------
முகவரி :---------------------------
பிறந்த ஆண்டு:---------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
---------------------------
பெற்றோர் ஒப்பம்


## ஆறுகால்மடம் ஞானவைரவர் ஆலய கும்பாபிஷேகம்

(சுதுமலை)

ஆனைக்கோட்டை - ஆறுகால் மடம் ஞானவைரவர் கோவில் கும்பாபிஷேக நிகழ்வு எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர்.

நீண்டகாலமாக புனரமைக்கப்படாத இந்த ஆலயம் புனரமைக்கப்பட்டு கும்பாபிஷேகமும், கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது. (91)

## கல்லுண்டாய் இந்து மயான பகுதியில் கால்நடைகளின் எச்சங்களால் பெரும் துர்நாற்றம் வீசுகின்றது!

கல்லுண்டாய் இந்து மயானப் பகுதியைச் சுற்றி இறந்த கால்நடைகளின் எச்சங்கள் கொட்டப்படுவதால், அதன் அருகில் வசிக்கும் 7,8 ஆம் வட்டார மக்கள் பெரும் சுகாதாரப் பாதிப்பை எதிர்கொள்வதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

யாழ்ப்பாண மாநகர சபையாலும் எல்லை தாண்டிவந்து கழிவுகள் கொட்டப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த செயற்பாடுகளை வலி. தென்மேற்கு பிரதேசசபைக்கு சுட்டிக்காட்டி, ஆனைக்கோட்டை திருவள்ளுவர் சேவா சனசமூக நிலைய செயலாளர் பொன்.கனகரத்தினம் கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

இந்த வாழ்வியல் சுகாதாரப் பிரச்சினைக்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படுமென, வலி.தென்மேற்கு பிரதேசசபை உள்ளூராட்சி உதவியாளர் தெரிவித்தார். (91)

## நன்கொடைகளை பெற்றுக்கொள்ளாத சனசமூக நிலையங்களுக்கு

(உடுவில்)

வலி.தென்மேற்கு பிரதேசசபைக் குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கு கடந்த ஆண்டுக்கான (2004) நன்கொடை வழங்கப்படவுள்ளது.

இதுவரை படிவங்களைப் பெற்றுக்கொள்ளாத சனசமூக நிலையங்கள் உடனடியாக பிரதேசசபை உள்ளூராட்சி உதவியாளரிடம் பெற்று பூரணப்படுத்தி ஒப்படைக்கும்படி அறிவிக்கப்பட்டுள்ளது. (101)

## நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

(உடுவில்)

கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி 110 ஆவது ஆண்டு நிறுவுநர் தினமும், நினைவு நாளும் பரிசளிப்பு விழாவும் இன்று பிற்பகல் 2.00 மணிக்கு கல்லூரி அதிபர் க.சிவாஜி தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா கலந்துகொள்வார். (101)

## நவாலி - வழுக்கையாற்றுப் பகுதியில் நீர்ப்பாசன திணைக்கள உப அலுவலகம்

(சுதுமலை)

யாழ்ப்பாண நீர்ப்பாசனத் திணைக்களத்துக்கென இரண்டு உப அலுவலகங்களை அமைப்பதற்கான பூர்வாங்கச் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனத்தால் நீர்ப்பாசனத் திணைக்களத்துக்கென வழங்கப்பட்ட 6 பரப்புக் காணியில் வழுக்கையாற்றை அண்மித்ததாக, வலிகாமம் பகுதியில் இந்தப் புதிய உப அலுவலகத்துக்கான கட்டடப் பணிகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதேவேளை, தொண்டமானாறுப் பிரதேசத்திலும் புதிய நீர்ப்பாசன உப அலுவலகத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த உப அலுவலகங்கள் அமைக்கப்படுவதால், இலகுவான முறையில் நீர்ப்பாசன செயற்பாடுகளை மேற்கொள்ள முடியுமெனவும், மழைநீர் சேமிப்பு, குளத்து நீர்ப் பயன்பாடுகள் தொடர்பான நடவடிக்கைகளை உடனுக்குடன் மேற்கொண்டு, விவசாய நடவடிக்கைகளை விருத்தியடையச் செய்யலாம் எனவும் அந்தப் பகுதி விவசாயிகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். (91)

## இருபத்தைந்து வருடங்களின் பின்னர் சிறைச்சாலை நலன்புரி குழு அமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் 25 வருடங்களுக்குப் பின்னர் சிறைச்சாலை நலன்புரி குழு அமைக்கப்பட்டு அந்தக் குழு சிறைச்சாலையில் உள்ள கைதிகளுடன் கடந்த வெள்ளியன்று தைப்பொங்கல் நிகழ்வைக் கொண்டாடியது.

25 வருடங்களின் பின்னர் அமைக்கப்பட்டுள்ள சிறைச்சாலை நலன்புரி குழுவின் தலைவராக சட்டத்தரணிகள் சங்கத் தலைவி சாந்தா அபிமன்னசிங்கவும், உபதலைவராக சட்டத்தரணி கேசவனும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு சிறைச்சாலை ஆணையாளர் மூலமாக இந்தக் குழு அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழு சிறைச்சாலையில் உள்ள கைதிகளின் நலன்கள் தொடர்பாக கவனிப்பதுடன் அங்கு நடைபெறும் விசேட நிகழ்வுகளிலும் கலந்துகொள்ளும்.

இதேவேளை, பார்வையாளர் குழு ஒன்று அமைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சிறைச்சாலையில் உள்ள கைதிகளுடன் தமது சந்தோஷ நிகழ்வுகளைப் பகிர விரும்புவோர் சிறைச்சாலை நலன்புரி குழுவுடன் தொடர்பு கொள்ளமுடியும்.




# வெண்டிக்காய்ச் செடியிலிருந்து ஆண்டு முழுவதும் பயன்பெறலாம்

ஆபிரிக்காவில், முதன் முதலாக வெண்டிச்செடி பயிரிடப்பட்டதாக அறிய முடிகிறது. பின்னர் வெப்ப வலய நாடுகளுக்குக் கொண்டு செல்லப்பட்டு – இந்தியா, சீனா, இலங்கை போன்ற நாடுகளில் பயிரிடப்பட்டுவருகிறது. சீனா, இந்தியாவில் வெண்டிச்செடித் தண்டு, வேரைப் பயன்படுத்தி, கடதாசி செய்யப்பட்டதாகவும் தெரிகிறது.

வெண்டிச்செடி எல்லாக் காலநிலைகளிலும் பயிரிடப்படக்கூடியது. சுலபமாகப் பயிரிடக்கூடியது. அத்துடன் ஆண்டு முழுவதும் விளைச்சலைப் பெற முடியும் என்ற இரு காரணங்களுக்காக விவசாயிகள் வெண்டிச்செடியைப் பயிரிட விரும்புகின்றனர்.



வெண்டிக் காய் விதைகளில் 20 வீதத்துக்குக் குறையாத கொழுப்புச்சத்து அடங்கியுள்ளது.

எமது பிரதேசங்களில் பிஞ்சு வெண்டிக்காயை உணவுக்காக எடுக்கின்றனர். ஆனால், இந்தியா, ஆபிரிக்கா போன்ற நாடுகளில் வெண்டி இலைகளையும் மரக்கறி உணவாக உட்கொள்கின்றனர்.



வெண்டிக்காய் விதைகளில் 20 வீதத்துக்குக் குறையாத கொழுப்புச்சத்து அடங்கியுள்ளது.

P.H அளவு உரியவாறு கொண்ட நீர் விநியோகிக்கக்கூடிய மண், இந்தச் செடிக்கு உகந்தது.

ஒரு ஹெக்டயருக்கு 4.5 கிலோ கிராம் வெண்டிக்காய் விதைகள் தேவைப்படும்.

**பயிரிடப்படும் காலம்**

பெரும் போகத்தில் செப்ரெம்பர் மாதம் ஆரம்பத்திலிருந்து, ஒக்ரோபர் மாதம் ஆரம்பம் வரையும், சிறுபோகத்தில் ஏப்ரல் மாதம் ஆரம்பத்தில் இருந்து, மே மாதம் ஆரம்பம் வரை பயிரிடக்கூடிய காலமாகும்.

| வழங்கவேண்டிய காலம் | யூரியா கிலோ கிராம்/ ஹெக்ரயர் | 3 அபர் பொசு பேட் கி.கிராம்/ ஹெக் | மியூரியேட் ஒ(f)ப் பொட்டேஸ் கி.கிராம்/ஹெக் |
|---|---|---|---|
| ஆரம்ப உரம் | 100 | 200 | 50 |
| கன்றுகள் முளைத்து 4 வாரங்களில் | 100 | – | 50 |
| கன்றுகள் முளைத்து 6 வாரங்களில் | 100 | – | 50 |

**பயிரிடும் இடைவெளி**

30x30x30 சென்ரிமீற்றர் அளவான கிடங்குகளை வெட்டி, அதற்குள் உக்கிய சாணமும், கொம்போஸ்ட் உரமும் சேர்க்க வேண்டும். ஒரு கிடங்கினுள் 3–4 விதைகள் இருக்குமாறு பயிரிட வேண்டும்.

பயரிடும் இடைவெளி 90x60 சென்ரிமீற்றர் ஆகும். விதைகளை விரைவாக முளைக்க வைப்பதற்காகவும், ஒரே அளவான பயிரைப் பெற்றுக்கொள்வதற்காகவும் விதைகளை பயிரிட முன்னர் 24 மணித்தியாலங்கள் நீரில் ஊறவைத்துக்கொள்ள வேண்டும். விதைகள் பயிரிட்டு ஒரு வாரத்தின் பின் கன்றுகள் முளைக்கும். அதன் பின்னர் இரு வாரங்களின் பின் ஒரு கிடங்கில் 3–4 ஆரோக்கிமான கன்றுகள் இருக்குமாறு விட்டு விட்டு, ஏனையவற்றை பிடுங்கி நீக்கிவிட வேண்டும்.

**நீர் விநியோகம்**

விதைகள்முளைக்கும் வரை தினம் தோறும் நீர்விநியோகம் சேய்ய வேண்டும். முளைத்த பின்னர் 3 நாட்களுக்கு ஒரு முறை நீர் வழங்கலாம்.

**களைகளை நீக்குதல்**

விதைகள் முளைத்து 2 ஆவது வாரம் முதல் 4 ஆவது வாரங்களுக்கிடையில் பூ பூக்க ஆரம்பிக்கும். இந்தக் காலகட்டங்களில் களைகளை நீக்கவேண்டும்.

விதைகள் பயிரிடப்பட்டு 4 வாரங்களின் பின், முதல் தடவையாக உரம் வழங்கும்போது, களைகளை நீக்கிவிட வேண்டும்.

**பீடைகளின் தாக்கம்**

ஒருவகைப் புழு முற்றாத தண்டுகளை துளைத்தும், வெண்டிக்காய்களில் துவாரங்களையும் ஏற்படுத்துகிறது.

பாதிப்பு அதிகமாக இருந்தால் உரிய கிருமி நாசினியைப் பயன்படுத்த வேண்டும்.

இலைகளைச் சுருட்டும் மயிர்கொட்டிகள் – இலைகளில் பாதிப்பை ஏற்படுத்தலாம். பாதிக்கு அதிகமாக இருந்தால் மட்டுமே உரிய கிருமிநாசினியைப் பயன்படுத்த வேண்டும்.

**மா பூஞ்சணம் நோய்**

இது இலைகளின் வெளிப்புறம் வெவ்வேறு இடங்களில் வெள்ளை நிறமாகக் காணப்படும். நோய் அதிகரித்தால், வெண்டிச் செடி காய்ந்துவிடும். நோய்த் தாக்கத்திற்குட்பட்ட செடிகளைப்பிடுங்கிவிட வேண்டும். கிருமிநாசினி பாவித்தும் நோயைக் கட்டுப்படுத்தலாம்.

**விளைச்சலைப் பெறல்**

விதைகளை முளைக்க வைத்து 50–55 நாட்களில் விளைச்சலைப் பெறமுடியும். முற்றாத காய்களைத் தவிர்த்து ஏனையவற்றை கூர்மையான கத்தி ஒன்றைப் பயன்படுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

ஒருநாள் விட்டு, மறுநாள் விளைச்சலைப் பெறலாம். வெண்டிக்காயின் வகை, காலநிலை பேன்றவற்றிற்கேற்ப விளைச்சலின் அளவு வேறுபடும். சாதாரணமாக ஒரு ஹெக் டயருக்கு 10–15 தொன் விளைச்சலைப் பெறமுடியும். காற்றுப்படுமாறு பொதி செய்து சந்தைக்கு அனுப்பவேண்டும்.

விதைகளைப் பெறுவதற்கு காய வைத்த வெண்டிக்காய்களின் மேல் பாகத்தைக் கட்டி வைக்க வேண்டும்.

### 100 கிராம் வெண்டிக்காயில் அடங்கியுள்ள போஷாக்குகள்

| | | |
|---|---|---|
| நீர் | – 89.6 | கிராம் |
| சக்தி | – 35 | கிலோ கலரி |
| புரதம் | – 1.9 | கிராம். |
| கொழுப்பு | – 0.2 | கிராம் |
| காபோஹைட்ரேட் | – 6.4 | கிராம் |
| கல்சியம் | – 66 | மில்லி கிராம் |
| பொசுபரஸ் | – 56 | மில்லிகிராம் |
| இரும்புச் சத்து | – 1.5 | மில்லி கிராம் |
| கரோடீன் | – 52 | மைக்ரோ கிராம் |
| தயமின் | – 70 | மைக்ரோ கிராம் |
| றைபோபிலேவின் | – 100 | மைக்கிரோ கிராம் |
| நியசீன் | – 0.6 | மில்லி கி ராம் |
| விற்றமின் சீ | – 13 | மில்லி கிராம் |

சசி சந்திரகாசன்

# இடப்பிரச்சினையுள்ள வீடுகளிலும் வீட்டுத் தோட்டம் அமைக்கலாம்

*இடவசதி குறைவான வீடுகளில், வீட்டுத்தோட்டங்களை எவ்வாறு அமைப்பது? பல வீடுகளில் இடப் பிரச்சினை உண்டு. இந்தப் பிரச்சினையை மிக இலகுவாகத் தீர்க்க முடியும். உடைந்த பானைகள், பேசின்கள், ரின்கள் மற்றும் பொலித்தீன் பைகளைப் பயன்படுத்தி வீட்டுத் தோட்டம் செய்ய முடியும்.*

*மிளகாய்க் கன்று, தக்காளிச் செடி, அவரை, வல்லாரை, முருங்கை, புடோல், பப்பாசி போன்றவைகளை வளர்க்க முடியும். இவற்றுக்கு இரசாயன உரங்கள் கிருமிநாசினிகளை உபயோகிக்காமல் பழைய இலைதழைகள், மாட்டெரு போன்றவற்றைப் போடலாம்.*





*மேலும் மருத்துவக் குணமுள்ள பல விதமான செடிகளையும் பயிரிடலாம். உதாரணமாக – கற்பூரவள்ளி, தூதுவளை போன்றவைகளுக்கு உரம் வழங்கும்போது, பாவித்த தேயிலை, கிளிசிறியா மரங்களின் இலைகள் போன்றவற்றுடன் மாட்டெரு, கொம்போஸ்ட் போன்ற உர வகைகளையும் உபயோக்க்க முடியும். உரிய நேரங்களில் நீர் வழங்கலும் அவசியமாகும்.*

**நோய்த் தடுப்பு**

*வைக்கோலால் இந்தச் செடிகளை மூடுவதன் மூலம், பாதுகாக்க முடியும். அதேநேரம் இந்த வீட்டுத் தோட்டப் பயிர்களுக்கிடையில் செவ்வந்தி, ரோஜாச் செடிகளை வைப்பதன்மூலம், நோய்த்தாக்கங்களைக் குறைக்கலாம். அதேபோல் ஒரு நாளைக்கு ஒரு தடவையாவது மரங்களோடு கதைக்க வேண்டும். அதுவும் செடிகளின் மரங்களின் வளர்ச் சியில் குறிப்பிடத்தக்களவு பங்களிப்பை வழங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.*

*சிறப்பாகப் பராமரிப்பதன் மூலம் வீட்டுக்குத் தேவையான மரக்கறிகளைப் பெற்றுக் கொள்ளமுடியும்.*

*இரசாயன உரம், கிருமிநாசினிகளை வழங்குவதன் மூலம், மண்ணின் வளம் குறைவடைகிறது. எனவே இயற்கை உரங்களைப் பயன்படுத்தி, மண்ணின் வளத்தைப் பேணுவதுடன், இரசாயனக் கலப்பற்ற மரக்கறி, கீரை, பழவகைகளை நாம் – வீட்டுத் தோட்டம் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.*

## தொழில்மலர்

# சுயதொழில் – "எழுதுங்கள் விற்பனை செய்யுங்கள்"

படித்த இளைஞர்கள் பலர் இன்று வேலைவாய்ப்பின்றி இருக்கிறார்கள். யாராவது தமக்கு வேலை தரவேண்டும் என்று நினைக்கிறார்கள். என்னால் ஒரு தொழிலைத் தொடங்க முடியுமா? தொடங்கிய பின்னர் வெற்றிபெற முடியுமா என்ற எண்ண ஓட்டமே இதற்குக் காரணம்.

ஆனால் இவ்வாறானதொரு எண்ண ஓட்டத்தில் இருக்கும் ஒரு இளைஞனுக்கு சரியான நேரத்தில் உரிய ஆலோசனைகள் வழங்கப்பட்டால், அந்த இளைஞன் வெற்றியின் உச்சியைத் தொட்டு விட முடியும்.



அவ்வாறானதொரு ஆலோசனைதான் எழுதுங்கள் விற்பனை செய்யுங்கள் என்பதாகும். இது ஒரு சுயதொழில் முயற்சி. அதுவும் குறிப்பாக வேலையற்ற பட்டதாரி இளைஞர்களுக்கான ஒரு சுய தொழில்.

பட்டதாரி இளைஞர்கள் பல்கலைக் கழகத்தில் படித்தவர்கள். நிறையப் புத்தகங்களை வாசித்திருப்பீர்கள். சில சந்தர்ப்பங்களில் உங்களுக்குத் தேவையான புத்தகங்களைப் பெறுவதில் பல இடர்பாடுகளைச் சந்தித்திருப்பீர்கள். ஒன்று அவ்வாறான புத்தகங்கள் இல்லாமல் இருந்திருக்கலாம். அல்லது அவை பெறுமதி கூடியனவாக இருந்திருக்கலாம்.

எனவே இவற்றைக் கருத்திற் கொண்டு, மாணவர்களுக்கான நூல்கள் மற்றும் வினாவிடைப் புத்தகங்களை எழுதி வெளியிடலாம். கணினி தொடர்பான நிறைய நூல்கள் எழுதப்படவில்லை. எனவே எ[illegible]துங்கள். உங்களின் படிப்புடன் சம்பந்தப்பட்ட படியால் எழுதுவதற்குச் சிரமங்கள் ஏற்பட மாட்டாது.

முதலில் ஒரு தொழிலைத் தொடங்குவதற்கு முன்னர், ஒருமுறை அல்ல ஓராயிரம் முறை சிந்திக்க வேண்டும். பிறகே முடிவு எடுக்க வேண்டும். முடிவு எடுத்ததன் பின்னர் தொழில் தொடங்குவதற்காகத் திட்டமிட வேண்டும்.

அதில் ஒரு பகுதியாக மாணவர்களைச் சென்று சந்தியுங்கள். இவ்வாறு சந்திப்பதன் மூலம் விற்பனைக்கான சந்தைநிலை மற்றும் எவ்வாறான புத்தகங்கள் எந்தவடிவில் தேவைப்படுகிறது என அறிந்து கொள்ள முடியும். அத்துடன் மாணவர்களின் விருப்பங்களையும் நேரடியாகத் தெரிந்து கொள்ள முடியும்.

இந்தக் கள ஆய்வை அடிப்படைக் கருவாகக் கொண்டு, புத்தகங்களை ஆக்கி, அச்சிட்டு வெளியிடலாம்.

நூல்களை எழுதத் தோடங்கும் போது, உங்களை ஒரு மாணவனாக நினைத்துக் கொள்ளுங்கள். என்னென்ன கேள்விகள் கேட்கத் தோன்றுகிறதோ அதை அடிப்படையாக வைத்து நூலை எழுதத் தொடங்குங்கள். இதன் மூலம் மாணவர்களுக்கு உங்களுடைய உரைநடை எளிதாகப் புரிகின்ற வகையில் அமையும். அவர்களும் விரும்பிப் புத்தகங்களைக் கொள்வனவு செய் வார்கள்.

உங்களுடைய நூல்களை விற்பனை செய்யும்போதும், சில இடர்பாடுகளை நீங்கள் எதிர்கொள்ளலாம். உதாரணமாக– ஒரு நூலை எடுத்துச் சென்று, விற்பனை செய்யும் போது, அதற்கான போக்குவரத்துச் செலவுக்கே பாதிவிலை கொடுக்க வேண்டி ஏற்படலாம்.

எனவே மூன்று வகையான நூல்களுக்கு மேல் எடுத்துச் சென்று விற்பனை செய்தால் போக்குவரத்துச் செலவைக் குறைத்க முடியும். அதே போக்குவரத்துச் செலவு. ஆனால் கூடுதல் இலாபம் கிடைக்கும்.

வெவ்வேறு துறையில் இருப்பவர்கள், கூட ஒன்றிணைந்து நூல்களைத் தனியாகவும், பொதுவாகவும் ஆக்க முடியும்.

முயற்சி செய்யுங்கள் வெற்றி கிட்டும்.

# திட்டமிட்ட செயற்பாடுகள் குறிக்கோளை அடைய உதவும்

திட்டமிட்டுச் செயற்படும்பொழுது தோல்விகள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் குறைவடைகிறது. தனி மனித வாழ்க்கைக்கு மட்டுமல்ல, நிறுவனங்களுக்கும் திட்டம் வேண்டும். திட்டமிடப்படாத செயற்பாடுகள் திசை [illegible]ய கப்பலைப் போன்று வீணானவையாகிவிடும்.

பொதுவாக இலாபம் ஈட்டுவது மட்டுமே தமது குறிக்கோள் என சில நிறுவனங்கள் நினைக்கின்றன. அதற்காக மட்டுமே திட்டம் தீட்டுகின்றன. ஆனால் இது தவறு.

ஏனெனில் ஒரு நிறுவனத்தின் அனைத்து வளங்களும் மதிப்புமிக்கவை. பணம், இயந்திரங்கள், உழைப்பு, மூலப்பொருட்கள் போன்ற அனைத்தையுமே திட்டமிட்டுப் பயன்படுத்தவேண்டும். இல்லையெனில், அவை ஒவ்வொன்றிலிருந்தும் பெறப்படும் பயன்களைப் பெறமுடியாது போய்விடுவதுடன், இழப்புக்களையும் ஏற்படுத்தும். இந்த இழப்பு– சில நேரங்களில் நிறுவனத்தைக் கடனாளியாக்கிவிடும். எனவே இலாபமீட்டுவதற்கு மட்டுமே திட்டமிடாமல், நிறுவனத்தின் அனைத்து வளங்களின் பயன் பாட்டுக்கும், எந்தச் செயற்பாட்டையும் திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டும்.

திட்டமிட்ட செயற்பாடுகள், நிறுவன குறிக்கோளை அடைவதற்கு உதவும். நிறுவனத்திடமுள்ள வளங்களைச் சிக்கனமாகவும், சீரிய முறையிலும் பயன்படுத்த உதவும். இது அவற்றை உரிய முறையில், உரிய இடத்தில், உரிய நேரத்தில் பயன்படுத்தி, விளைவுகளை எதிர்பார்த்தபடி அமைய உதவிபுரியும். எனவே அனைத்துக்குமே திட்டமிடல் தேவையாகும்.



திட்டம் பலவகைப்படும். குறிக்கோள்கூட ஒரு திட்டம்தான். எல்லாச் செயற்பாடுகளும் ஒரு குறிக்கோளை நோக்கியே இயக்கப்படுகின்றன. குறிக்கோள்கள் பல இருக்கலாம். அதை நோக்கியே நிறுவனம் இயங்குகிறது. அந்தக் குறிக்கோளை அடைய உழைக்கிறது, போராடுகிறது. அப்போதுதான் அந்த நிறுவனம் இலக்கை எய்தமுடியும்.

நிறுவனங்கள் தமது குறிக்கோளை அடைய, அனைத்து வளங்களையும் பயன்படுத்துகின்றன. இதற்கான வழிகாட்டு நெறிகள், கொள்கைகளாக வகுக்கப்படுகின்றன. கொள்கையும் திட்டம்தான். கொள்கை அடிப்படையில்தான் செயற்பாடுகள் நிகழ்கின்றன.

உதாரணமாக – ஒரு வணிக நிறுவனம் மூன்று மாத காலக்கடனில் பொருட்கள் வழங்கலாம் என்று முடிவு செய்வது ஒரு கொள்கை. கடன் விற்பனை இல்லை என்று முடிவு செய்வதும் ஒரு கொள்கை. பொருளின் முகவிலை மீது 10 வீத இலாபம் வைத்து விற்பனை செய்வது ஒரு கொள்கை. சொந்தமாகக் கட்டடம் கட்டுவது அல்லது வாடகைக் கட்டடத்தில் இயங்குவது என்பதும் கொள்கைதான். இத்தகைய கொள்கைகள் ஒரு திட்டத்தின் பல வகைகளில் ஒன்றாகும். எல்லா நிறுவனங்களுக்கும் கொள்கைகள் இன்றியமையாதவையாகும்.

திட்டத்தைச் செயற்படுத்தும்போது கால அளவு குறிக்கப்படவேண்டும். இதற்கு ஒரு நிரல்திட்டம் உருவாக்கப்படவேண்டும். இந்த நிரல்திட்டம் எப்போது, எந்தெந்த நிகழ்வுகள் நடைபெறும் என்பதைத் திட்டமிட உதவுகிறது. அப்போதுதான் திட்டப்படி நிகழ்வுகள் நடைபெறுகின்றனவா என்பதைக் கண்காணிக்க முடியும். முன்னுரிமையுடைய செயற்பாடுகள் எவை எவை என்பதை வரிசைப்படுத்தவும் அது உதவுகிறது. ஒரு திட்டத்தைக் கால அடிப்படையில் வரிசைப்படுத்திக் கூறும்போது, அது நிரல் திட்டமாகிவிடுகிறது.

ஒரு திட்டத்தைச் செயற்படுத்தும்போது, அந்தத் திட்டத்துக்குத் துணைசெய்யப் பல துணைத் திட்டங்கள் தேவைப்படுகின்றன. இத்தகைய துணைத் திட்டங்கள் திட்டத்தை நடைமுறைப்படுத்த உதவுவதோடு – குறிக்கோள், இலக்கு ஆகியவற்றிலிருந்து செயற்பாடுகள் திசைதிரும்பிச் செல்லாதிருக்க உதவுகின்றன.

மேலும் ஒவ்வொரு நிறுவனமும் சில விதிகளை உருவாக்கிக்கொண்டு, அவற்றின் வழியே இயங்குகின்றன. விதிகளும் திட்டங்கள்தான். ஆனால் விதிகள் நெகிழ்ச்சியற்றவை. அவற்றை அனைவருமே கடைப்பிடிக்கவேண்டும். இதனால் ஒழுங்கு பராமரிக்கப்படுகிறது. கட்டுப்பாடு செயற்படுத்தப்படுகிறது. எனவே விதிகள் ஒரு நிறுவனத்தின் செயற்பாடுகளில் முதன்மையான இடத்தை வகிக்கின்றன.

ஒரு திட்டத்தைச் செயற்படுத்துவது எவ்வாறு என்பதற்கு வழிமுறைகள் தேவைப்படுகின்றன. இவற்றை விதிமுறை என்ற துணைத்திட்டம் வழங்குகிறது. செயற்பாடுகளில் ஒருங்கிணைப்பை விதிமுறைகள் ஏற்படுத்தித் தருகின்றன. இதனால், செயற்பாடுகள் ஒன்றுக்கொன்று முரண்படாமல் ஒருங்கிணைந்து நிகழ்வதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. விதிமுறைகளும் ஒழுங்கைப் பராமரிக்க உதவுகின்றன. விதிமுறைகள் பின்பற்றப்படும்போது, திட்டங்கள் தெளிவோடு செயற்படுத்தப்படுகின்றன.

அத்தோடு, விதிமுறைகள் நிறுவனத்தின் பல்வேறு பிரிவுகளை இணைத்துவைக்கும் உறவுப் பாலங்களாகவும் செயற்படுகின்றன. உதாரணமாக, ஒரு கடன் பட்டியலுக்குத் தொகை வழங்கவேண்டுமென்றால், அந்தப் பட்டியல் பொருள் வாங்கும் பிரிவாலும், கணக்குப் பிரிவாலும் சரிபார்க்கப்பட வேண்டும். அதன்பின்னரே தொகை வழங்கப்படும். இதே போன்று சில நேரங்களில் உற்பத்திப் பிரிவு, கணக்குப் பிரிவு, விற்பனைப் பிரிவு ஆகியவை ஈடுபடுத்தப்பட வேண்டும். இவ்வாறு விதிமுறைகள் ஒருங்கிணைப்புக்குப் பெரிதும் உதவுகின்றன.

(தொடரும்)

## குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | சங்கானை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 60/= | 70/= | 80/= | 70/= | 70/= | 60/= |
| வெண்டிக்காய் | 40/= | 70/= | 70/= | 40/= | 45/= | 40/= |
| உருளைக்கிழங்கு | 70/= | 80/= | 80/= | 70/= | 80/= | 80/= |
| கத்தரிக்காய் | 70/= | 70/= | 80/= | 80/= | 70/= | 70/= |
| பாகற்காய் | 80/= | 90/= | 100/= | 70/= | 70/= | 60/= |
| கரட் | 40/= | 50/= | 60/= | 40/= | 40/= | 60/= |
| பீற்றூட் | 50/= | 60/= | 70/= | 40/= | 45/= | 70/= |
| முருங்கைக்காய் | * | * | * | * | * | * |
| வெங்காயம் | 65/= | 50/= | 60/= | 60/= | 65/= | 60/= |
| பச்சை மிளகாய் | 60/= | 50/= | 60/= | 70/= | 55/= | 60/= |

# முல்லைத்தீவில் இறந்தவர்களில் 2 765 பேரின் பெயர்கள் பதிவு!

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுனாமி கடல் அனர்த்தத்தால் இதுவரையில் 2 ஆயிரத்து 765 பேரின் இறப்புக்கள் உறுதிசெய்யப்பட்டுப் பதியப்பட்டுள்ளன. இதேவேளை 558 பேர் காணாமல் போனோர் பட்டியலில் தொடர்ந்தும் உள்ளனர் என முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் நிலைமைகள் தொடர்பாக அவரிடம் கேட்டபோது -

இந்த மாவட்டத்தைப் பொறுத்தவரை இப்போது 23 நலன்புரி நிலையங்களில் 3 ஆயிரத்து 314 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 993 பேர் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். உறவினர்கள், நண்பர்களின் வீடுகளில் 2 ஆயிரத்து 507 குடும்பங்களைச் சேர்ந்த 10 ஆயிரத்து 576 பேர் மொத்தமாகத் தங்கியுள்ளனர். இவர்களைவிட முல்லைத்தீவு நகரத்தை அண்டிய பிரதேசத்தைச் சேர்ந்தவர்களும் வர்த்தகத் துறையில் ஈடுபட்டவர்களுமாக மொத்தமாக 186 குடும்பங்களைச் சேர்ந்த 936 பேர் தமது தொழில் வாய்ப்புக்களை இழந்து கஷ்டப்படுவதாகத் தெரியவருகிறது. இதைவிட 6 ஆயிரத்து 7 குடும்பங்கள் நிர்க்கதியான நிலையில் உள்ளன.

இவ்வாறு தங்கவைக்கப்பட்டுள்ளவர்களுக்கு புனர்வாழ்வு அமைச்சின் உதவியுடன் அவர்களுக்கு சமைத்த உணவு வழங்கி வருகின்றோம். சுகாதாரம், உணவு, குடிநீர்ப் பிரச்சினை ஓரளவுக்குத் தீர்க்கப்பட்டுள்ளது.

23 நலன்புரி நிலையங்களில் 22 நலன்புரி நிலையங்கள் பாடசாலைகளில் இயங்கிவருகின்றன. இவ்வாறு இயங்கிவரும் நலன்புரி நிலையங்களை இடமாற்ற வேண்டிய தேவையும், அவசியமும் ஏற்பட்டுள்ளது.

எனவே இந்த மக்களை வேறு இடங்களில் தற்காலிக நலன்புரி நிலையங்களை அமைத்து மாற்ற வேண்டிய நிலையில் உள்ளோம். அதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டு, இதற்காக 13 இடங்களைத் தற்போது தெரிவு செய்துள்ளோம்.

இந்தவாரம் அதற்கான பணிகள் ஆரம்பமாக இருக்கின்றது. அமைக்கப்படும் தற்காலிக நலன்புரி நிலையமானது சுகாதாரம், நீர் போன்ற பிரச்சினைகள் இல்லாமல் இருக்க வேண்டும் என்பது முக்கியமானதாகும்.

கடந்த 26 ஆம் திகதி இடம்பெற்ற இந்த அனர்த்தம் காரணமாக ஏற்பட்ட அழிவுகள், கட்டட இடிபாடுகள தொடர்ந்தும் அகற்றப்பட்டு வருகின்றன. இதை கடற்புலிகள் மேற்கொண்டு வருகின்றனர். கஷ்டமான நிலையிலும்கூட சிறப்பான வகையில் அவர்கள் அந்தப் பணிகளைச் செய்துவருகின்றார்கள். கனரக வாகனம் போதியளவு எமக்குக் கிடைக்கவில்லை. ஹலோ ட்ரெஸ்ட் மூலம் இரண்டு வாகனங்கள் கிடைத்து அவை மீட்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டன.

தற்போது ஹலோ ட்ரெஸ்ட் தமது பணிகளை மேற்கொள்வதற்காக நேற்றுமுன்தினம் அந்த வாகனங்களை மீளப் பெற்றுவிட்டது. இந்த நிலையில் நாங்கள் வெளியாட்களிடம் இருந்துதான் வாகனங்களை வாடகைக்கு அமர்த்த வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக ஆராயப்பட்டு வருகின்றது.

மீட்புப் பணிகள் கடுமையாக இடம்பெற்றபோது கட்டட இடிபாட்டுக்குள் இருந்து தொடர்ந்தும் பல மனித சடலங்கள் மீட்கப்பட்டு வருகின்றன. இன்றுவரை உறுதிப்படுத்தப்பட்ட புள்ளிவிபரங்களின்படி இதுவரை முல்லைத்தீவு மாவட்டத்தில் 2 ஆயிரத்து 765 இறப்புக்களை உறுதிப்படுத்தியுள்ளோம். எமது புள்ளிவிபரங்களின்படி இன்னும் 558 பேர் காணாமல் போனவர்களாகப் பதியப்பட்டுள்ளது. எமக்கு ஒரு அச்சம் இருக் கின்றது. புதுவருடக் கொண்டாட்டம், நத்தார்ப் பண்டிகைக் கொண்டாட்டத்துக்கு முல்லைத்தீவு நகர்ப்பகுதிக்குச் சென்றவர்கள் இதற்குள் மாண்டு போயுள்ளார்கள். உதாரணமாக யாழ்.மாவட்டத்தின் தாளையடி, வத்திரயான், வெற்றிலைக்கேணி, வல்வெட்டித்துறை, தனங்கிளப்பு, பருத்தித்துறை, காங்கேசன்துறை, ஆனைக்கோட்டை, உடுத்துறை, மருதங்கேணி, கீரிமலை, அச்சுவேலி, செம்பியன்பற்று, சுண்டிக்குளம், வவுனியா, கனகராயன்குளம், அம்பாறை, திருகோணமலை, பன்குளத்தில் இருந்து ஒருவரும், மட்டக்களப்பில் இருந்து மூன்று பேரும், மன்னார் பேசாலையில் இருந்து ஒருவருமாக சுமார் 25 ஆண்களும், 37 பெண் களும் இறந்துள்ளார்கள் என்பது உறுதிப்படுத்தப்பட்டு அடையாளம் காணப்பட்டுள்ளது. இது தொடர்பாக உரிய மாவட்ட அரச அதிபர்களுக்குப் பெயர்ப்பட்டியல் அனுப்பப்பட இருக்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார்.

## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

### ஜனவரி - 20

1256 : இங்கிலாந்தின் நாடாளுமன்றம் முதன் முதலாக இன்றுதான் கூடியது.

1841 : சீனா, ஹொங்கொங் நகரை பிரிட்டிஷாருக்கு நீண்டகாலக் குத்தகைக்கு இன்று வழங்கியது.

1892 : ஜேம்ஸ் றெயிஸ் மிர் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட கூடைப்பந்தாட்ட விளையாட்டு, முதன் முதலாக இன்றுதான் மாஸா சூ ஸெட்டில் நடைபெற்றது.

1917 : முதலாம் உலகப்போர் காரணமாக இன்றுமுதல் பிரான்ஸில் பொது விநியோகத்துறைவாரத்துக்கு இருதடவைகள் மூடும்படி பேக்கரிகளை உத்தரவிட்டது.

1917 : 31 வயதுக்குட்பட்ட எந்த ஒரு ஆணுக்கும் இராணுவ சேவையில் இருந்து விலக்களிக்க முடியாது என்று இன்று பிரிட்டன் அறிவித்தது.

1944 : இன்று ஒரு நாளில் மட்டும் பிரிட்டன் விமானப்படை பெர்லின் மீது 2400 தொன் நிறையுடைய குண்டுகளை வீசியது.

1993 : கேணல் கிட்டு உட்படப் பத்து மாவீரர்களது நினைவுக்கல் நடுகை நிகழ்வு யாழ்.தீருவிலில் இடம்பெற்றபோது தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அதில் கலந்துகொண்டார்.

1995 : போப்பாண்டவர் இலங்கைக்கு புனித விஜயத்தை மேற்கொண்டநாள் இன்றாகும். இவர் இலங்கையில் ஜோசப்வாஸ் அடிகளாருக்கு முத்திப் பூர்த் தியை நிறைவேற்றி வைத்தார்.

2004 : சுதந்திரக்கட்சி – ஜே.வி.பி கூட்டணி உடன்படிக்கை கொழும்பில் கைச்சாத்தாகிய நாள் இன்றாகும்.

தொகுப்பு - சந்துரு

# இனிவரும் காலங்களில் மேற்கொள்ளும் திட்டங்கள் சவால் நிறைந்ததாக இருக்கும்!

## புனர்வாழ்வுக்கழக நிறுவன முகாமைத்துவ ஆலோசகர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால், சுனாமி கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இனிவரும் காலங்களில் மேற்கொள்ளப்படவிருக்கின்ற திட்டங்கள் பெரும் சவால்கள் நிறைந்ததாக இருக்குமென புனர்வாழ்வுக்கழக நிறுவன முகாமைத்துவ ஆலோசகர் நரேன் தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்-

சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு ஒரு வாரத்துக்கு மேற்பட்டகாலம் வரை தமிழர் புனர்வாழ்வுக்கழகமே மக்களுக்கான உடனடி மனிதாபிமான செயற்பாடுகளை மேற்கொண்டு வந்தது.

எமது நிறுவனத்தால் 255 நலன்புரி நிலையங்கள் அமைக்கப்பட்டு, 220 வரையான லொறிகளில் அத்தியாவசியப் பொருட்கள் விநியோகிக்கப்பட்டன.

இதேவேளை, எமக்கு புலம் பெயர்ந்து வாழும் உறவுகளின் உதவிகள் கணிசமானளவு கிடைத்திருக்கிறது. தற்பொழுது புலம் பெயர்வாழ் உறவுகளால் விமானம் மூலம் பொருட்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

எனினும் மக்களின் சில தேவைகளை நிறைவுசெய்ய முடியாமல் உள்ளது. எனினும அவ்வாறான தேவைகளை இனங்கண்டு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் இன்னும் துரிதமாகச் செயற்பட இருக்கிறது என அவர் மேலும் தெரிவித்தார்.




## வாடியடி வீதியைப் புனரமைக்கக் கோரிக்கை

கிளிநொச்சி - பூநகரி வாடியடி வீதி நீண்டகாலமாகப் புனரமைக்கப்படவில்லை. இதனால் இந்தப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

பூநகரி வீதி தம்பிராய்ச் சந்தியில் இருந்து வாடியடிவரையான வீதியில், வீதிப்புனரமைப்புக்கென கிரவல் மண் குவியலாகப் பறிக்கப்பட்டு நீண்டகாலமாகியும் இதுவரை வீதி புனரமைக்கப்படவில்லை. இதனால் இந்த வீதியூடாக எந்தவொரு வாகனமும் பயணிக்க முடியாதுள்ளது.

சம்பந்தப்பட்டவர்கள் இதைக் கருத் திற்கொண்டு இந்த வீதியைப் புனரமைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## பற்சிகிச்சை ஆரம்பம்

(வடமராட்சி கிழக்கு)

சுனாமி கடற் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு மருதங்கேணி வைத்தியசாலையில் பற்சிகிச்சை நாளை தொடக்கம் நடைபெறவுள்ளது. இதற்கான ஒழுங்கள் யாவும் பூர்த்தியாகியுள்ளது என பிராந்திய பல் வைத்திய அதிகாரி வைத்தியகலாநிதி மாசிலாமணி தவராஜா தெரிவித்தார்.

பல் வைத்திய சேவை ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நடைபெறுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலும் சமுர்த்தி நிவாரணம் வழங்கப்படும்!

(வவுனியா)

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் சமுர்த்தி நிவாரணம் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதுதொடாபாக ஆராயும் விசேட கூட்டமொன்று நேற்றுமுன்தினம் வவுனியா அரச காரியாலயத்தில் இடம்பெற்றது.

வவுனியா அரச அதிபரின் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களின் அரச அதிபர்கள் நிதி அமைச்சு மற்றும் சமுர்த்தி அமைச்சுக்களின் மேலதிக செயலாளர்கள், சமுர்த்தி ஆணையாளர் எனப் பலர் கலந்து கொண்டனர்.

முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களுக்கான சமுர்த்தி அதிகாரிகள் நியமிக்கப்பட்ட பின் சமுர்த்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (01)

# ஆரம்ப சுகாதார நிலையத்தை கையளிக்கக் கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள சுகாதாரத் திணைக்களத்துக்குரிய பல ஆரம்பசுகாதார நிலையங்கள் கட்டி முடித்தும், இதுவரை கையளிக்கப்படவில்லை.

இதனால் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் உட்பட அனைவருக்கும் சுகாதார சேவையை வழங்குவதில் திணைக்களம் பெரும் சிரமத்தை எதிர் நோக்குகின்றது. எனவே சம்பந்தப்பட்டவர்கள் இந்தக் கட்டடங்களை விரைவில் கையளிப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு மக்களுக்கு உரிய சேவையை வழங்க உதவுமாறு கிளிநொச்சி மாகாண சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் மருத்துவ கலாநிதி த.சத்தியமூர்த்தி கேட்டுள்ளார்.

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு அடிப்படை வசதிகளை நிர்வாகசேவை வழங்குகிறது

(கிளிநொச்சி)

சுனாமி கடற் கொந்தளிப்புக் காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் பணியில் தமிழீழ நிர்வாக சேவையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

நலன்புரி நிலையங்களிலிருந்து வீடுகளுக்குத் திரும்பும் மக்களுக்கான வாகனப் பதிவுகளை ஏற்படுத்திக் கொடுப்பது, வீடுகளை இழந்த மக்களுக்கான தற்காலிக குடியிருப்புக்களை அமைத்துக் கொடுப்பது போன்றவற்றில் இவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

அத்துடன் பாதிக்கப்பட்ட மக்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் - நலன்புரி நிலையங்கள், மக்கள் மீள் குடியேறிய பகுதிகள் என்பவற்றில் தண்ணீர்த் தாங்கிகள் மூலம் குடிநீர் விநியோகம் மேற்கொள்வதுடன் கழிப்பறை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், தொற்றுநீக்கி மருந்துகளை விசுறுதல் உள்ளிட்ட பல வேலைத திட்டங்களிலும் தமிழீழ நிர்வாக சேவையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

## சிறுவன் மரணம்

மன்னார் - தலைமன்னார் பியர் பிரதேசத்தில் சிறுவன் ஒருவன் கிணறு ஒன்றைச் சுற்றி சைக்கிள் ஓடிப் பழகிய வேளை தவறுதலாக கிணற்றினுள் வீழ்ந்து பரிதாபகரமாக உயிரிழந்தான்.

# பாப்பா மோட்டை பிரதேசத்தில் பனைகள் படையினரால் தறிப்பு

மன்னார் - பாப்பா மோட்டைப் பிரதேசத்தில் இராணுவத்தினரால் 400 இற்கும் மேற்பட்ட பனைகள் அழிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பிரதேசத்தில் 1999 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினரால் 400 இற்கும் மேற்பட்ட பயன்தரு பனை மரங்கள் தறிக்கப்பட்டு, காவலரண்கள் அமைத்தல், வேலிகள் அமைத்தல் போன்ற செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்பட்டன.

தற்பொழுது மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில் இந்த பகுதியில் 400 இற்கும் அதிகமான பனைமரங்கள் அழிக்கப்பட்டுள்ளதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

# கண்ணிவெடி அகற்றும் பணி தற்காலிகமாக இடைநிறுத்தம்!

தமிழர் தாயகப் பிரதேசங்களில் கடந்த வருடம் நவம்பர் மாதத்திலிருந்து டிசம்பர் மாதம் 26ம் திகதி வரையும் ஆயிரத்து 123 வெடிபொருட்கள் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் அகற்றப்பட்டுள்ளன.

கடந்தகாலப் போர் நடவடிக்கைகள் மூலம் இராணுவத்தினரால் தமிழர் தாயகப் பிரதேசங்களில் புதைக்கப்பட்ட வெடிபொருட்களை அகற்றும் பணி கடந்த 2002 ஆம் ஆண்டுமுதல் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதனடிப்படையில் 2002 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம்முதல் டிசம்பர் மாதம் வரையான காலப்பகுதிகளில் 4 ஆயிரத்து 321 நிலக் கண்ணி வெடிகளையும், 4 வாகன எதிர்ப்பு கண்ணிவெடிகளையும், 223 வெடிபொருட்களையும் மீட்டுள்ளனர்.

2003 ஆம் ஆண்டு காலப் பகுதியில் 6 ஆயிரத்து 795 நிலக் கண்ணிவெடிகளையும், 11 வாகன எதிர்ப்பு கண்ணிவெடிகளையும், 11 ஆயிரத்து 48 ஏனைய வெடிபொருட்களையும் மீட்டுள்ளனர்.

2004 ஆம் ஆண்டுகாலப் பகுதியில் 10 ஆயிரத்து 69 நிலக்கண்ணிவெடிகளையும், 25 வாகன எதிர்ப்பு கண்ணிவெடிகளையும், 9 ஆயிரத்து 969 ஏனைய வெடிபொருட்களையும் இதுவரையில் மீட்டுள்ளனர்.

தற்பொழுது சுனாமி கடல் அனர்த்தம் இடம்பெற்ற பிரதேசங்களில் மீட்புப் பணிகளில், மனிதநேய கண்ணிவெடிப் பிரிவினர் ஈடுபட்டுள்ளதனால் வெடிபொருட் கள் அகற்றும் பணி தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*செறுவார்க்குச் சேண்இகவா இன்பம் அறிவுஇலா*
*அஞ்சும் பகைவர்ப் பெறின்*

திருக்குறள்

# நமது நோக்கு

## சர்வதேச நாடுகளின் முடிவு சரியானதே!

இலங்கைக்கு - சுனாமி ஆழிப்பேரலை ஏற்படுத்திய அனர்த்தங்கள் காரணமாக ஏற்பட்ட அழிவுகள் மற்றும் பாதிப்புகள் தொடர்பாகவும் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் மற்றும் மக்களின் புனரமைப்பு நடவடிக்கைகள் சம்பந்தமாக மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் முழுமையான மதிப்பீடு ஒன்றை சர்வதேச நாடுகள் உடனடியாக மேற்கொண்ட பின்னரே இலங்கைக்கான நிவாரண மற்றும் நிதி உதவிகள் அனைத்தையும் வழங்கவேண்டும் என பல்வேறு அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தொண்டர் அமைப்புகள் கேட்டுக்கொண்டதன் நியாயத்தன்மையைப் புரிந்துகொண்டுதானோ என்னவோ இலங்கைக்கு வழங்கத் தீர்மானித்துள்ள உதவிகளை சிலகாலம் நிறுத்திவைக்க சர்வதேச நாடுகள் முடிவுசெய்துள்ளதாகத் தெரிகிறது.

சுனாமி அனர்த்தம் காரணமாக ஏற்பட்ட மக்களின் அவலங்களை நீக்கவும் அவர்களுக்குத் தேவையான உதவிகளை - நிவாரணத் தேவைகளை வழங்கவும் சர்வதேச நாடுகள் பலவும் விரைந்து செயற்பட்டதன் பேரில் நிதியாகவும் -நிவாரணப் பொருட்களாகவும் - மீட்புப்பணிக்கான சாதனங்கள் மற்றும் ஏனைய ஆளணி உதவிகளாகவும் இலங்கைக்கு அனைத்தும் வந்து குவிந்துள்ளபோதிலும் - பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் பிரதேசங்களுக்கு பாரபட்சமற்ற முறையில் நிவாரணப் பணிகளை ஒரு ஒழுங்கான திட்டமிடலின் அடிப்படையில் அரசாங்கம் மேற்கொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் பரவலாக முன்வைக்கப்படும் நிலையில் அரசுக்கு எதிரான குரல்கள் எழஆரம்பித்துள்ளன.

தமிழர் புனர்வாழ்வுக்கழகம் உட்பட பல்வேறு தன்னார்வத் தொண்டர் அமைப்புகள், பொது நிறுவனங்கள், அமைப்புகள் போன்றவை அனர்த்தம் நிகழ்ந்து முடிந்த மறுகணமே நிவாரணப்பணிகளில் அர்ப்பணிப்புடன் உணர்வுபூர்வமாகச் செயற்படத்தொடங்கிய போதிலும் அந்தப் பணிகளுக்கும் இடையூறாக அரசின் சில தீர்மானங்கள் அமைந்ததில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான சக மக்களின் மனிதாபிமானப் பணிகள் படைத்தரப்பினரின் அச்சுறுத்தல்களுக்குள்ளானதால் அந்த மக்களுக்கான நிவாரணப்பணிகள் முடங்கிப்போகும் ஆபத்தும் ஏற்பட்டுள்ள நிலையில் - தொலைநோக்குத் திறனற்ற அரசின் அரசியல் உள்நோக்கங்களுடன் அமைந்த நடவடிக்கை குறித்த அதிருப்திகள் பலதரப்பாலும் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றதென்றே கூறவேண்டும்.

சகலதையும் தன்வசப்படுத்தும் மேலாதிக்க சிந்தனையுடன் அரசு மேற்கொள்ளத்தொடங்கியுள்ள இந்தச் செயற்பாடுகளின் எதிரொலிகள் சர்வதேச சமூகத்தின் அதிருப்திக்கு உள்ளாகத் தொடங்கியுள்ளதென்றே கூறவேண்டும்.

பெருமளவில் வந்து குவியும் நிவாரணப் பொருட்களின் வகைகள், அவற்றின் பெறுமதி, அவற்றை விநியோகிக்கும் முறை போன்ற அனைத்தும் முழுமையாக ஒழுங்கமைக்கப்பட்ட நிர்வாகக் கட்டமைப்பின் கீழ் பதிவுகள் செய்யப்பட்டு நேர்மையான முறையில் பாரபட்சமின்றி உண்மையிலேயே பாதிப்புக்களுக்குள்ளான மக்களுக்கு விநியோகிக்கப்படுகின்றதா என்பது கேள்விக்குறியேயாகும்.

இந்தச் செயற்பாடுகள் அனைத்தும் - இராணுவத்தின் பொறுப்பின் கீழ் நிவாரணப்பணிகள் ஜனாதிபதியால் கொண்டுவரப்பட்டதையடுத்து சிதம்பரசங்கரமாகவே உள்ளது.


நிவாரணங்களை வழங்குதல் தொடர்பான விடயங்களில் அரசு பாரபட்சம் காட்டுகின்றதை ஐரோப்பிய ஒன்றியம் கண்டித்துள்ளதுடன் முறையாக விநியோகிக்கும்படி அரசுக்கு அழுத்தம் கொடுத்துமுள்ளது என்ற ஊடகச் செய்திகள் அரசின் மீதான சர்வதேச சமூகத்தின் சந்தேகங்களுக்கு சிறந்த சான்றாகும்.

இந்தச் சூழலிலேயே சர்வதேச சமூகம் இலங்கைக்கு வழங்கத் தீர்மானித்துள்ள உதவிகளை சிலகாலம் நிறுத்திவைக்கத் தீர்மானித்துள்ளதாகக் கூறப்படுகிறது. இது ஒரு சரியான முடிவேயாகும்.

இதனடிப்படையில் இத்தனை நாட்களும் - அதாவது சுனாமியின் தாக்குதல் நடந்துமுடிந்த பின்னரான இந்த மூன்று வாரங்களில் சர்வதேச சமூகம் அள்ளிவழங்கிய பன்முகப்பட்ட உதவிகளையும் சர்வதேச சமூகத்தின் பிரதிநிதிகள், ஐ.நா.வின் பிரதிநிதி - சர்வகட்சிப் பிரதிநிதிகள் அரசசார்பற்ற நிறுவனங்களின் உறுப்பினர்கள் போன்ற பலதரப்பட்டவர்களையும் உள்ளடக்கிய குழுஒன்றை அமைத்து மதிப்பீடுசெய்து பாதிக்கப்பட்ட இடங்களினதும், மக்களினதும் அழிவுகளையும், இழப்புகளையும் நேரில் பார்த்து, ஆய்வுசெய்து எந்தவித பாரபட்சமும் அரசியல் உள்நோக்கமுமின்றி நிவாரண மற்றும் மீள்கட்டுமானப் பணிகளை சகல இடங்களிலும் ஒரேவிதமாக மேற்கொள்ள நடவடிக்கைகளை எடுக்கவேண்டியதே இன்றைய காலத்தின் அவசியமுமாகும்.

இல்லையேல் நிவாரணப்பணிகள் நியாயமாக நடக்கும் என்ற நம்பிக்கை மக்களுக்கு ஏற்படப்போவதில்லை என்பதுடன் - சர்வதேச நாடுகளின் உதவிகள் முழுமையாகவும் பாரபட்சமின்றியும் பாதிப்புக்குள்ளான மக்கள் அனைவருக்கும் அரசால் விநியோகிக்கப்படும் சாத்தியமே கிடையாது என்பதும் உண்மையே. இதனை சர்வதேச சமூகமும் உணர்ந்து கொள்ளத் தொடங்கியுள்ளதையே அவற்றின் இந்த முடிவு உணர்த்துவதாகஉள்ளது.

# நாடும் நடப்பும்




## ‘ஊர்சுற்றி’யார் பார்வையில்...

# உதவிகள் கோடி குவிந்தாலும் வறுமை விட்டுப் போகமுடியாது!

சுனாமி அலைகளின் பேரழிவு அனர்த்தத்தின் விளைவாக இலங்கையில் இரண்டரை இலட்சம் மக்கள் வறுமையில் பீடிக்கப்படும் நிலையிலிருப்பதாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் பொருளாதார நிபுணர் ஒருவர் எச்சரித்திருக்கிறார்.

இயற்கை அனர்த்தத்தால் ஏற்பட்ட துன்ப துயரங்களைத் துடைப்பதற்கு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலக நாடுகள் ஓடோடிவந்து உதவிபுரிகின்றன.

இலங்கைக்குவரும் உதவிகள் யாவும் - மத்தியில் குவிக்கப்பட்டுப் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படவிருக்கின்றதாம்.

இவைதவிர காலி, அம்பாந்தோட்டை முதலிய தென்னிலங்கைப் பகுதியில் அனர்த்தத்தால் அழிந்துபோன ரயில் நிலையங்கள் மற்றும் ரயில்வே தளபாடங்களை ஈடுசெய்து, புதிதாக அமைப்பதற்குச் சில நாடுகள் முன்வந்திருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தென்னிலங்கையில் அழிந்துபோன குடியிருப்புக்களைப் புதிதாகக் கட்டிக்கொடுக்க வெளிநாட்டு அரசாங்கங்கள் சில முன்வந்துள்ளன. அனர்த்தத்தில் அழிந்துபோன கல்வி நிலையங்களைக் கட்டிக்கொடுப்பதற்கு வெளிநாட்டு அரசாங்கங்கள் சிலவும் அரசு சாரா நிறுவனங்களும் முன்வந்திருக்கின்றன.

அனர்த்ததால் பெரும் பாதிப்புக்குள்ளான காங்கேசன்துறை, காலித்துறைமுகங்களைப் புனரமைப்பதற்கு நெதர்லன்ட் அரசாங்கம் துரிதமாகச் செயற்படுவதற்கு முன்வந்திருக்கிறது. இப்படி அழிந்துபோனவற்றையெல்லாம் புனரமைப்பதற்கு வெளிநாட்டு அரசாங்கங்களும், அரசசார்பற்ற நிறுவனங்களும் முன்வந்திருக்கின்றன. சில இடங்களில் இதற்கான வேலைகளும் தொடங்கப்பட்டிருக்கின்றன.

உடனடியாகப் புனரமைக்கக்கூடிய சில சிறியவேலைகள் நிறைவடைந்திருக்கின்றன. இவைதவிர, இன்னமும் வெளிநாட்டு உதவிகள் பணமாகவும், பண்டமாகவும் வந்து குவிந்துகொண்டிருக்கின்றன.

இந்த நிலையில் சுனாமியின் அனர்த்தத்தின் எதிரொலியாக இலங்கையில் இரண்டரை இலட்சம் மக்கள் வறுமையால் வாடவேண்டிய நிலை ஏற்படுமென்று, ஆசிய அபிவிருத்தி வங்கியின் பொருளாதார நிபுணர் ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

இதேபோல் இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிலிப்பைன்ஸ், இந்தியா, மாலைதீவு ஆகிய இடங்களிலும் வறுமையால் பாதிக்கப்படும் மக்களின் தொகை அதிகரிக்குமென்றும் தெரிவித்திருக்கிறார்.

இவ்வளவு தொகையாகப் பல வழிகளிலும் இலங்கைக்கு உதவிகள் கிடைத்தும், வறுமையால் பீடிக்கப்படும் மக்களின் தொகை அதிகரிக்குமென்றால், இந்த உதவிகளும் மேல் மட்டத்தவர்களுக்குத்தான் போய்ச்சேருமோ என்று நண்பன் கேட்கிறான்.

இதேசமயம் நேற்றைய ஆங்கிலப் பத்திரிகை ஒன்றின் முதற்பக்கத்தில் வெளிவந்த ஒரு செய்தியில் தேசிய இளைஞர் சேவைமன்றத்தின் தலைமை அலுவலகத்திலிருந்து திருகோணமலைக்குப் பெருமளவில் உலர் உணவுப் பொருட்கள் அனுப்பப்பட்டிருந்ததாம்.

இந்தப் பொருட்களில் பல திருகோணமலை நகருக்குள் உள்ள விஜித்தபுர என்ற பகுதியிலிருக்கும் வீடொன்றில் கண்டெடுக்கப்பட்டதாம். தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் உறுப்பினர் ஒருவருக்குச் சொந்தமான இல்லத்தில் இந்தப் பொருட்கள் இருந்தன.

அரிசி, பருப்பு, சீனி, பால் பவுடர், குழந்தைகளுக்கான பால்மா, உடுபுடவைகள், மருந்துகள், தண்ணீர்ப் போத்தல்கள் ஆகியவை இங்கு கண்டுபிடிக்கப்பட்டன.

இந்தப் பொருட்கள் சுனாமி அழிவுக்குப்பின் தன்னைப் பார்க்கவந்த நண்பர்கள் சிலர் இந்தப் பொருட்களைக் கொண்டு வந்ததாக வீட்டுக்காரர் தெரிவித்திருக்கிறார்.

இந்த வீட்டுக்காரருக்கு மனைவியும், ஒரு குழந்தையுமே இருக்கிறார்களாம். இலங்கைக்குக் கிடைக்கும் உதவிப் பொருட்கள் எப்படிப் பகிர்ந்தளிக்கப்படுகின்றன என்பதற்கு இதை ஒரு உதாரணமாக எடுத்துக்கொளளலாமா?

கடற்கொந்தளிப்பால் ஏற்பட்ட அழிவுகளைவிட கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கில ஊடகங்கள், ‘சிங்கள ஊடகங்கள் பற்றிச் சொல்லவேண்டியதே இல்லை’

விடுதலைப் புலிகளைப் பற்றி எந்தச் செய்தியுடனாவது தொடர்புபடுத்திக் கயிறுதிரிக்காவிட்டால் நிம்மதியே இருக்காது.

விடுதலைப் புலிகள் எதிர்ப்புத் தெரிவித்தபோதிலும், அமெரிக்க கடற்படையினர் சிகிச்சையளிக்கும் மருத்துவ முகாம்களுக்குள் செல்லவேண்டாமென்று தடுத்தபோதிலும், மந்திகை வைத்தியசாலையில் தமிழ் மக்கள் பெருமளவில் சென்று சிகிச்சை பெற்றதாக டெய்லிமிரர் பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

உதவிக்கு வந்தவர்களை நாங்கள் எப்போதும் சந்தேகிக்க மாட்டோம் என்று விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அமெரிக்கா பற்றிக் கொழும்பு ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு சமீபத்தில் பதிலளித்திருந்தது இவர்களுக்குத் தெரியாதுபோலும்.

சுனாமி அனர்த்த அழிவுகளைவிட, இந்தக் கொழும்பு ஊடகங்களுக்கு விடுதலைப் புலிகள் என்ன செய்கிறார்கள்? எது செய்கிறார்கள்? எங்கே போகிறார்கள்? அவர்கள் ஒன்றுமே செய்யாவிட்டால், ஏன் சும்மா இரக்கிறார்கள்? அவர்கள் சுனாமியுடன் போய்விட்டார்களா? என்று ஏதாவது வெளியிட்டுக் கொண்டிருக்கவேண்டுமென்பது அவர்களுக்கு எழுதாத ஒரு விதிபோலும்.

யாழ்ப்பாணத்தில் நடந்த பொங்குதமிழ் நான்காவதாண்டு நினைவு நிகழ்வில் - யாழ். பல்கலைக்கழகத்தில் தமிழ்த் தேசியக்கொடி ஏற்றியதும், அத்திவாரக்கல் இட்டதும் - போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறும் நடவடிக்கை என்று அவரை இவரைக் கேட்டுக்கொண்டு சிண்டுமுடியும் செய்தியை வெளியிட்டிருக்கிறது இதே மிரர் பத்திரிகை.

தமிழர் புனர்வாழ்வுக்கழகம் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக ஓடிவந்து செய்த சேவைகளை, ஜாதிக ஹெல உறுமய என்ற பிக்குமார் அமைப்பைச் சேர்ந்த ஒரு தலைவர் மனந்திறந்து பாராட்டியிருக்கிறார். வசிட்டர் வாயால் பிரம்மரிஷி.

இந்தச் செய்தி சிங்கள, ஆங்கில ஊடகங்களில் வெளிவந்ததா என்பது பற்றித் தெரியவில்லை. இப்படியான செய்திகளையும் தேசியத் தலைவர் எந்தவித பாகுபாடுமின்றிப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஓடிச்சென்று உதவும்படி விடுதலைப் புலிப் போராளிகளுக்கு உத்தரவிட்டு அனுப்பியும் செய்திகளையும் சிங்கள, ஆங்கில ஊடகம் வெளியிட்டதில்லை.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக முதலில் முப்பது கோடி ரூபாயைத் தலைவர் ஒதுக்கிக் கொடுத்ததையும் சிங்கள, ஆங்கில ஊடகங்கள் வெளியிட்டதில்லை. நல்லவற்றைப் பார்ப்பதற்கும் நல்லவற்றைக் கேட்பதற்கும், நல்லவற்றைச் செய்வதற்கும் ஊடகங்கள் சிங்கள பௌத்த மேலாண்மைவாத கொழும்பு ஊடகங்களுக்குத் தெரியாது.

சிறுவர்களை விடுதலைப் புலிகள் படையணிக்குத் திரட்டுவதாக ஒரு ஆங்கிலப் பத்திரிகை தலையங்கம் தீட்டியிருக்கிறது. சுனாமி அழிவிலிருந்து காப்பாற்றுவதற்கு விடுதலைப் புலிப் போராளிகளும், தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் உடனடியாக உதவிக்குச் சென்றிராவிட்டால், அம்மா லண்டனிலிருந்து திரும்பி ஆலோசனை நடத்தி, வெளிநாட்டு உதவிகள் கிடைக்கும் மட்டும் காத்திருந்து, இவற்றைப் பங்கிடுவதென முடிவுசெய்து செயறபட்டிருந்தால் - சிறுவர்கள் மட்டுமல்ல, பெரியவர்களும்கூட இன்று உயிருடன் இருந்திருக்கமுடியாது.

சுனாமி அலையில் மரணமானவர்களின் சடலங்களை அடையாளம் காணாமல் வடக்கு-கிழக்கில் புதைத்துவிட்டதாக ஒரு ஆங்கிலப் பத்திரிகையின் செய்தியில் குறிப்பிடப் பட்டிருந்தது. உடனடியாகவே சடலங்களை அப்புறப்படுத்தி புதைக்காதிருந்தால், இன்று தமிழர் தாயகத்தில் தொற்றுநோய் பெருகி, அதனால் பலர் மாண்டிருக்கவும்கூடும்.

வெளிநாட்டு ஊடகவியலாளர்களும் மனிதநேய அமைப்புக்களும், விடுதலைப் புலிகளின் நிர்வாகத் திறமையையும், உதவி வழங்கிய திறமையையும் பாராட்டுவது கொழும்பு ஊடகங்களுக்கு வயிற்றெரிச்சலாக இருக்கிறது.

இதனால் அமெரிக்காவின் ஒரு அமைப்பு ஏதோ சொல்லவும், அதனை வைத்து சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறுவர்களைப் படைக்குச் சேர்ப்பதாக பறைகொட்டி வயிற்றெரிச்சலைத் தீர்த்துக்கொள்கிறார்கள்!

உண்மையை ஒருநாள் உலகம் விளங்கிக்கொள்ளும். கொழும்பு ஊடகவியலாளர் சிலர் தாங்கள்தான் இலங்கையின் ஒருமைப்பாட்டையும், ஒற்றையாட்சி முறையையும், சிங்கள பௌத்தத்தையும் பேணிப்பாதுகாக்கும் இரட்சகர்கள் என்று கருதிக்கொளவது மட்டுமல்ல, தமிழர்களும், தமிழ்த் தலைவர்களும ஏதோ கிள்ளுக்கீரைகள் என்ற முறையில் எழுதுகிறார்கள்.

தாங்கள்தான் இந்த நாட்டை ஆட்சி புரிபவர்களாகவும் இவர்கள் நினைத்துக்கொள்கிறார்கள். இவர்களின் ஆட்டமெல்லாம் தமிழர் தாயகத்துக்கு வெளியேதான் என்பதை அவர்கள் நினைவிருத்திக்கொண்டால் நல்லது என்றான் நண்பன்.

பகுதி XIII சங்கர்

# காற்றே நீ எம் கதை கேளாயோ...
# அலையே நீ எம் நிலை உணராயோ...

**சுனாமி கடற்கொந்தளிப்பு பேரழிவு அனர்த்தம் வடக்கு – கிழக்கு கரையோர மக்களுக்கு ஏற்படுத்திய தாக்கங்கள் அழிவுகள் பற்றிய நேரடிப் பார்வைப் பதிவுகளும் அது குறித்த உணர்வுப் பகிர்வுகளும்...**



ஜனாதிபதி சந்திரிகா - படையினரின் பொறுப்பில் முகாம்களை ஒபபடைப்பதாகக் கூறியதைத் தொடர்ந்து, பொதுவாக படையினர்- போராளிகளுடன் முறுகல்போக்கிலேயே நடந்து கொள்கின்றனர்.

கல்முனைப் பகுதிகளை நாம் பார்வையிட்ட போது, அங்கே சிலர் வாகனங்களில் வந்து தமது எஞ்சிய உடைமைகளை மீட்டெடுத்துச செல்வதைக் காணமுடிநதது.



கல்முனையில் அமைந்துள்ள விடுதலைப்புலிகளின் பணிமனைக்கு நாம் சென்ற போது, தெகியத்த கண்டியைச் சேர்ந்த 'நியூ ரத்னம் மோட்டோர்ஸ' என்னும் நிறுவனத்தின் பணிப்பாளர்களில் ஒருவரான திலக்செனவிரத்ன மற்றும் அனந்த செனவிரத்ன ஆகியோர் வந்திருந்தனர்.

இரண்டு அறைகள் மற்றும் ஒரு விறாந்தையுடன் கூடிய ஆயிரம் வீடுகளை சுனாமியால் பாதிப்புற்ற மக்களுக்கு நாடெங்கும் கட்டிக் கொடுக்கத்தாம் திட்டம் ஒன்றை வைத்துள்ளதாகவும். இதன்படி காரைதீவில் 10 வீடுகளையும், திருக்கோவிலில் 25 வடுகளையும் கட்ட உத்தேசித்திருப்பதாகவும, இது தொடர்பாக வேறு இடங்கள் எவை என்பது குறித்து போராளிகளுடன் கதைக்க வந்திருப் பதாகவும் குறிப்பிட்டார்.

அவருடனான உரை யாடலில் போலத்தனத்தை காண முடியவில்லை. சிங்கள அரசியல் வாதிகளின் போக்குக்கும், மக்களின் போக்குக்கும் இடையே இடைவெளியொனறு இருக்கத்தான் செய்கிறது போல ஒரு நம்பிக்கைக் கற்று தென்பட்டது. ஆனாலும் அரசியல்வாதிகளின் ஆற்றல சுனாமியின் சக்தி கொணடது. இந்தப் பேரின வாதிகள் இவ்வாறான திட்டங்களுக்கு அனுமதிப் பார்களா? என்ற கேள்வியும் பிறந்தது.

இதற்கிடையே சகல வட்டமைப்புத் திட்டங்களுக்கும், வீடமைப்பு அதிகார சபையூடாகவே நடைபெற வேண்டும் என்ற அரசின் அறிவிப்பு வந்தது.

கல்முனை பணிமனையில் நாம் நின்றபோது, ஒரு சிறிய நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் வந்தார்கள். தமது பங்களிப்பாக ஒரு பகுதி உணவுப் பொருட்களைக் கொண்டு வந்தபோது, மருதமுனையில் அவற்றை வழங்க முடியாத நிலை ஏற்பட்டதாகக் குறிப்பிட்டனர்.

'என்ன பிரச்சினை?' எனக் கேட்டதற்கு தொகையான ஆட்கள் இருப்பதால் எமது சாமான்களின் அளவைப் பார்த்துவிட்டு அடிக்க வந்து விட்டார்கள். நாம் ஏதாவது எம்மால் முடிந்ததைச் செய்ய ஆவலோடு வந்தோம், கடைசியில கொஞ்சம் கொஞ்சமாக இடம் பெயர்ந்தோர இருக்குமிடங்களில் கொடுத்து விட்டு, உங்களிடம் மிகுதியைத் தருகிறோம். உங்களை நாடிவருபவர்களுக்கு இதைக் கொடுத்து உதவுங்கள்' எனக் கூறினார் அந்த நிறுவனத்தின் பிரதிநிதியான முஸலிம் இளைஞர். கல்முனைப் பொறுப்பாளர் அதைப் பெற்றுக்கொண்டு நன்றி தெரிவித்தார்.

எல்லோரும் தமது மன உறுத்தல் காரணமாக ஏதாவது முடிந்த அளவில் உதவிபுரியவேண்டும் எனத்துடிக்கிறார்கள். அவர்களின் உணர்வுகளும்புரிந்து கொள்ளப் படவேண்டும். தேவை அதிகம் உளளதென்பதற்காக இவ்வாறான பங்களிப்பை வழங்க முன்வருவோரின் மனதைக் காயப்படுத்துவது அநாகரிகமானது. கடைசியில் உதவி புரிய வந்தவர்களைத் தேற்றி அனுப்பும் நிலை வந்து விட்டது.

● ● ●

கல்முனைப் பகுதிகளைச் சுற்றிப் பார்க்கையில் பெரும்பாலான அரச கட்டடங்கள் அழிந்து போயிருந்ததைக் காணமுடிந்தது. அப்படியே வருகையில் ஒரு இடம் பெயர்ந்தோர் முகாமில், 'தமது மைத்துனியை இழந்த ஒரு இளைஞரைச் சந்தித்துப் பேசினோம்.

அவருடனான உரையாடல் இது -

'உங்கட மச்சாளுக்கு என்ன பேர்?'

'றிஸ்வானா'

'என்ன செய்து கொண்டிருந்தவ?'

'படிச்சுக் கொண்டிருந்தவ'

'எந்தப் பள்ளிக் கூடம்?'

'அல்ஜலால் ஸ்கூல், அது கடற்கரைப்பக்கமிருக்கு, சாய்ந்த மருதில'

'அப்ப நீங்கள் என்னெண்டு தப்பினீங்கள்?'

'ஆக்கள் கூக்குரல் இடவும் தப்பி ஓடித்தம்'

'அந்தப் பிள்ளை என்னெண்டு சிக்கியவ'

'அந்தப் புள்ள காக்கா வீட்ட தூங்கிட்டு இரிந்திரிக்கி எல்லாரும் றோட்டுக்கு வந்து பாத்திரிக்கு, அப்ப தண்ணிகிறுகுது, அப்ப காக்காவ எழுபபிரிக்கு, அப்ப காக்கா தண்ணியடிச்ச மரத்தில பிடிச்சார். அப்ப தண்ணி அடிச்சு அந்தப் புள்ள ஒரு காருக்குமேல ஏத்தி வைச்சிருக்கு. திருப்ப ஒரு அலை வந்து அடிச்சு புள்ளய இழுத்துக் கொண்டு போக, தண்ணிக்குள்ளயே மௌத்தாயிரிச்சு"

● ● ●

கல்முனை - காரைதீவுப் பகுதியில நடந்த சில சம்பவங்கள் (நான் அறிந்தவை) மற்றும் கருத்துக்கள்.

ரி.வாமன் (தமிழீழ சுகாதாரப் பரிவு)

அந்த மாவட்ட இடம்பெயர்ந்த மக்களுக்கு அரச நிர்வாகம் புரியவில்லை என்பது புலனாகிறது. ஒரு இடம் பெயர்ந்தோர் முகாம், அந்த ஊரையே அழிக்கும் என்பதில் சந்தேகமில்லை. எனவே தொற்றுநோய்கள் பரவ இடமளிக்காமல் சுகாதாரமாக இருக்க வேண்டும். கல்வியறிவு கூடியோர் உள்ள இடம் என்பதால், காரைதீவில் ஓரளவுக்கு சுத்தம் உணடு. ஏனைய ஊர்களில் சுகாதாரச் சர்கேடு நிலவுகிறது. சுகாதாரப் பகுதியினர் இது குறித்து பாராமுகமாக இருப்பது போல தெரிகிறது.

நாம் யாழ். மருத்துவபீட மாணவர்களையும், டொக்டர்களையும் நடமாடும் வைத்தியசேவைக்காக அமர்த்தியுள்ளோம். தேவையானளவு மருந்துகள் உண்டு. எவ்வாறாயினும் தொற்று நோய்கள் ஏற்படாத நிலை வேணடும்.

**ஞானம்** (தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை)

முல்லைத்தவு, கிளிநொச்சி, வவுனியாவிலிருந்து வந்த 60ஆசிரியர்களும் இடம் பெயர்ந்தோர் முகாம்களில் தமது சேவையை ஆற்றுகின்றனர்.

கடற்கரைப் பகுதியில் நாம் ஐந்து அழுகியசடலங்களைக் கண்டெடுத்து எரித்தோம். இதுவரை நூற்றுக்கு மேற்பட்ட சடலங்களைப் புதைத்துள்ளோம்.

யுத்தத்தைவிடவும் பாரிய சுமையை சுனாமி எங்களுக்கு ஏற்படுத்தியுள்ளது. யுத்தத்தில் கூட படாத துன்ப துயரங்களை எமது மக்கள் இந்த அனர்த்தத்தில் சந்தித்துள்ளனர். மயானம், ஊர்மனை எல்லாம் ஒன்றுதான் என்று இந்தப் பூகம்பம் உணத்தியுள்ளது.

**இ.இந்திரராஜா** (வவுனியா வடக்கு கோட்டக் கல்விப் பணிப்பாளர்)

சுவாமி விபுலானந்தர் பிறந்த காரைதீவு மக்கள் இப்படிச் சின்னாபின்னமாகியுள்ளமை வேதனைதான். எனினும், எமது மக்களின் மனங்கள் உடையக் கூடாது. மனம் வலுப்பெற வேண்டும்.

கடற்கரையில் இளநீரை வைத்து கடலைப் பார்த்த வண்ணம் கண்ணீர் விட்டவர்களைக் கண்டு மனம் நெகிழ்ந்தோம்.

● ● ●

சம்பவதினம் நடைபெறவிருந்த அம்பாறை மாவட்ட சுகாதாரத் தொண்டர் சங்க நிர்வாகக் கூட்டத்தில் கலந்து கொள்ளவென வருகைதந்த 15 சுகாதாரத் தொண்டர்களின் நிலைபற்றித் தெரியவில்லை. இவர்களின் நிலையறிய இந்தச் சங்கத்தலைவர் ஐ.எல்.எம் நசீர் முயற்சியெடுத்தும் 01.01.2005 வரை எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. மேலும் மருதமுனையைச் சேர்ந்த சாஜித் (வயது11) என்ற சிறுவன் குறித்தும் தகவலில்லை.

கல்முனைக்கு விஜயம் செய்த சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா முற்றாக அழிந்த காரைதீவு சுற்றயல்கூறு மருத்துவமனையை எட்டியும் பார்க்கவில்லை. அதேவேளை, காரைதீவின் இரு பக்கங்களிலுமுள்ள முஸ்லீம் பிரதேசங்களான - மருதமுனை, சாய்ந்தமருது வைத்தியசாலைகளைப் பார்வையிட்டு மீளமைக்க ஒழுங்கு செய்துள்ளார். இரு முஸ்லிம் கிராமங்களுக்கும் இடையில் இருக்கும் தமிழ் கிராமத்திலுள்ள வைத்தியசாலையைப் பார்க்காமல் சென்றதன் மூலம், அருகருகே வாழும் மக்களிடையே விரிசலை ஏற்படுத்த முயற்சிக்கிறார். சுனாமியின் பின் மீண்டும் துளிர்க்கும் தமிழ் முஸ்லிம் உறவுகளிடையே பதற்றத்தையும், ஒருவர் மீது ஒருவருக்கு சந்தேகத்தையும் ஏற்படுத்தும் முயற்சி இது. இந்தப் பிரித்தானிய சங்கம் ஆங்கிலேயர் சிங்களவர்களுக்கு விட்டுச் சென்ற சொத்து இதுவாகும்.

இடம் பெயர்ந்தோரை அவர்கள் தங்கியுள்ள மண்டபத்தினுள்ளேயே சமைக்குமாறு படையினர் கட்டளையிட்டதால், (08-01-2005) பாண்டிருப்பு மகாவித்தியாலயத்தில் முகாம் நிர்வகிக்கும் நிர்வாகிகளுக்கும், படையினருககுமிடையே முறுகல் நிலை ஏற்பட்டது. வழக்கமாக பாடசாலைக்கு வெளியே தான்சமைபபது வழக்கம. உள்ளே குழந்தைகள் இருப்பதால், அவர்களுக்கு இடையூறு ஏறபடாமல் இருக்கவும், தீவிபத்துக்களைத் தடுக்கவுமே இவ்வாறு வெளியல் சமைத்தனர். இந்த விவகாரம் முற்றியநிலையில் அன்றைய தினம் அந்த முகாமுக்கு விஜயம் செய்த ஐ.தேக வின் முன்னாள் அமைச்சர் மஹிந்த சமரவீர, மயோன் முஸ்தப்பா எம்.பி ஆகியோரிடம் முறையிட வேண்டிய நிலை ஏற்பட்டது.

இடம் பெயர்ந்தோர் முகாம் விடயங்களில் படையினர் தலையீடு இருந்தால், நிலைமை எவ்வாறிருக்கும் என்பதற்கு இது ஒரு உதாரணம். இடம் பெயர்ந்தோர் முகாம்களை தடுப்பு முகாம்களாக நோக்கும இந்த நிலை குறித்து மக்கள் விசனமடைந்துள்ளனர்.

படைமுகாம்களின் அருகே புதைககப்பட்டிருந்த மிதிவெடிகள் கடல்நீரில் அடித்துச் செல்லப்பட்டு, மக்கள் குடியிருப்புகளில் வீசப்பட்டுள்ளன. இதனால் புனரமைப்புப் பணிகளில் தடங்கள் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பான விழிப்புணர்வு சுவரொட்டிகளை வெண்புறா நிறுவனத்தினர் வெளியிட்டுள்ளனர். **(தொடரும்)**

வாரநோக்கு... யாழவன்

# அரசு எதிர் கொண்ட நிதி நெருக்கடி சுனாமி மூலம் தீர்த்து வைக்கப்பட்டுள்ளது

சுனாமி அலை ஏற்படுத்திய அழிவுகளுக்குப் பின், இலங்கை மீது அனேக நாடுகளுடைய கவனமும் திசை திரும்பியுள்ளது. இந்த நிலையில் சர்வதேச பிரதிநிதிகள் பலரும் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு விஜயம் செய்து, பாதிக்கப்பட்ட மக்களை குசலம் விசாரிப்பதுடன், தாம் சார்ந்த அமைப்புக்களினுடைய உதவிகளையும் தாராளமாக வழங்கி வருகின்றனர். இவர்களுடைய உதவி அந்தரித்து நிற்கும் மக்களுக்குப் பெரிதும் உதவியாக அமைந்துள்ளன என்பதை எவருமே மறுக்க முடியாது. ஆனால் மககளுக்கு என வழங்கப்படும் அனைத்து உதவிகளும், மக்களை சென்றடைகின்றனவா என்பது தான் இன்று ஐயப்பாடான விடயமாகவுள்ளது.

பெரியதொரு நிதி நெருக்கடி நிலையை சந்தித்திருந்து, அதிலிருந்து மீளுவது முடியாத காரியமென, நினைத்திருந்த இலங்கை அரசுக்குத் தற்போது அதிர்ஷ்டம் தணிந்துள்ளது என பலரும் கருத்து வெளியிட்டு வரும் இந்த வேலையில், அரசின் ஆயுதக் கொள்வனவு குழுவொன்று ஆயுதக் கொள்வனவுக்காக சில நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளது. இது மீண்டும் போரைத் தொடருவதற்கான ஆயததங்களா? அல்லது சுனாமியால் அடித்துச் செல்லப்பட்ட ஆயுத இழப்பை ஈடுசெய்வதற்கான ஆயுதக் கொள்வனவா? என்பது சரியாகக் கூற முடியாததாகவுள்ளது.

காலியிலிருந்து முல்லைத்தீவு ஈறாக ஏற்படுத்திய சுனாமி அழிவால் இலங்கை கடற்படையின் இலங்கை இராணுவத்தினரும் பாரிய போர் தளபாட அழிவுகளையும், உயிரிழப்புக்ளையும் சந்தித்துள்ளனர் என்பது இராணுவ ஆய்வாளர்களின் கருத்தாகும். ராடர் நிலையங்கள் கடற்படைக் கலங்கள் என பலவும் கடலோடு அடித்துச் செல்லப்பட்ட நிலையிலே, ஆயுத சமநிலையை அவசரமாகப் பேண வேண்டிய



அடித்துள்ளது. திறைசேரி சர்வதேசநிதி உதவிகளால் நிரம்பி வழிகிறநிலை ஏற்படப்போகிறது. வேலைவாய்ப்பற்ற பிரச்சினை வேலையிலிருப்பவர்களுக்கு மேலதிக சம்பள உயர்வுகளைப் பேச்சளவிலேயே வழங்கககூடிய நிலையிலிருந்த அரசுக்கு - நிதிநெருக்கடியை சமாளிபபதற்கு நல்லதொரு வாய்ப்பு ஏற்பட்டுளளது. இலஙகைக்கு இருந்த கடன்கள் கூட, கடன் வழங்குனர்களாலேயே பின்வாங்கப்பட்டுள்ளது. அமெரிக்க டொலருக்கு எதிரான ரூபாவின் பெறுமானமும் அதிகரித்துள்ளது.மொத்தமாக இலங்கை அரசு எதிர் கொண்டநிதி நெருக்கடி சுனாமி மூலம் தீர்த்துவைக்கப்பட்டுள்ளது.

ஆனால் அரசு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்கென சர்வதேசத்தால் அனுப்பிவைக்கப்படும் நிதி உதவிகளை பதுக்குவதிலும், பாதியைப் பகிர்வதிலும், அதிலும் மீதியை அரச அதிகாரிகள இடைவழியில் சுருட்டிக் கொள்வதுமென மிகவும் மனவேதனையான, அநாகரிகமான நிகழ்வுகளும் இடம் பெற்ற வண்ணமுள்ளன. தமிழர் தாயகப் பகுதிக்கெனக் குறிப்பாக அனுப்பி வைக்கப்படும் உதவிகள் கூட அரசினால் முடக்கிவைக்கப்பட்டுள்ள தொருநிலை.

இவற்றைவிட பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட வரும் சர்வதேசப் பிரதிநிதிகளையும் வடக்கு - கிழக்கு தமிழர் தாயகப் பகுதிக்கு அனுப்பாமல், தனது இனவாதத்தைக இனம் காட்டி வருகிறது. ஐ.நா. செயலரின் வருகையின்மையின் சூடு வடக்கு - கிழக்கிலே ஆறுவதற்கு முன், கனேடியப் பிரதமரின் வருகை தொடர்பாக சந்தேகம் நிலவுகிறது. அவரது வருகையை ஏற்பாடு செய் துள்ள அதிகாரிகளை மேற்கோள் காட்டி கனேடியப் பிரதமர் வடக்கு - கிழக்குக்கு குறிப்பாக விடுதலைப் புலிகளுடைய கட்டுப்பாட்டுப் பகுதிக்கு விஜயம் செய்யமாட்டார் என ரோயட்டர் செய்தி வெளியிடடுள்ளது.

ஆனால், கனடாவாழ் ஈழத் தமிழர்களாலும் விடுக்கப்பட்ட வேண்டுகோளை அடுத்தே, கனேடியப் பிரதமர் இலங்கைக்கு வருகை தரவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த நிலையில் அவர் தமிழர் தாயகப் பகுதிகளுக்கு வருகை தராமல் செல்வார்களாக இருந்தால், அது அவரது வருகையின் அவசியத்தைக் காட்டாது. பாதுகாப்புக் காரணங்களைக் காரணம் காட்டி, கனேடியப் பிரதமரின் வருகை தடை செய்யப்படுமாக இருந்தால், சர்வதேச ரீதியாக இலங்கை அரசு மீண்டும் ஒரு தவறான பார்வைக்கு உள்ளாகும். இது தமிழர்கள் மீதான சர்வதேச ஆதரவையும், அனுதாபத்தையும் மேலும் அதிகரிப்பதாகவே அமையும்.

சுனாமி பேரலைகள் ஏற்படுத்திய அழிவுகளின் எதிரொலியுடன், போர் பற்றிய பீதியுணர்வு சற்றுத் நிர்ப்பந்தம் அரசுக்கு ஏற்பட்டுள்ளது. இதற்காகவே அவசர ஆயுதக் கொள்வனவிலே இறங்கியுள்ளது. அது அரசின் கடமையாகக் கூடக் கருதப்படலாம்.

ஆனால் ஆயுதக் கொள்வனவுக்கு எனப் பயன்படுத்தப்படவுள்ள நிதி - எங்கிருந்து? எவ்வாறு? பெறப் படவுள்ளது என்பதே இன்று எழுந்துள்ள கேள்வியாகும். சுனாமியால் பொருளாதார நெருக்கடியை எதிர் கொண்டுள்ள அரசு, ஏற்கனவே பெரும் நெருக்கடிக்குள்ளேயே இருந்தது. இநத நிலையிலே திடீரென ஆயுதக் கொள்வனவில் ஈடுபட வேண்டிய நிலையை எதிர்கொண்ட அரசு, அதற்கான நிதியைப் பெற்றுக் கொள்வதிலே நிச்சயமாக நெருக்கடியை எதிர் கொண்டே ஆக வேண்டும். இதனாலே தான் சுனாமி அனர்த்த நிதியின் ஒரு பகுதியை ஆயுதக் கொள்வனவுக்கு பயன்படுததப்படுகிறது என ஐயபபடும் நிலை உருவாகியுள்ளது.

ஏனெனில் அரசு, இராணுவம் குறிப்பாக கடற்படையினர் சுனாமி மூலம் எதிர்கொண்ட ஆயுத உயிர் இழப்புக்களால் அதிகம் கலக்கமடைந்துள்ளது. இந்தச் சந்தர்ப்பத்திலே விடுதலைப்புலிகள் போரை மீள ஆரம்பித்தால், அதனை எதிர் கொள்ளும் திராணி அரசுக்கு இல்லையென்ற நிலையால் அவ்வாறான தொருநிலை ஏற்படாமலிருப்பதைத் தடுப்பதற்கு உடனடி நகர்வுகளை அரசு மேற்கொண்டது. இதன் ஒரு கட்டமாகவே மீட்புப் பணிகளில் பெரும் பகுதி நிறைவுற்ற நிலையிலே அமெரிக்கப்படையினர் பாரிய கடற்படை கப்பலொன்றுடனும், உலங்கு வானூர்த்திகள் சகிதமும, சுனாமி அனர்த்த அவசர மீட்புப் பணியெனும் பெயரிலே அழைக்கப்பட்டு, இந்து சமுத்திர பிராந்தியத்தின் இலங்கைக் கடற்பரப்பிலே நிறுத்தப்பட்டுள்ளனர். மேலதிக படையினரும் அவ்வப்போது இரகசியமாக வரவழைக் கப்பட்டுள்ளனர். எனவே இராணுவ சமநிலை ரீதியாக, இலங்கை இராணுவம் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்பதே உண்மையாகும்.

நண்டகால கடன் திட்ட அடிப்படையிலே ஆயுதக் கொள்வனவுகள் மேற்கொள்ளப்படுகின்றன எனக் கூறப்பட்டாலும், அதுவும் கூட சுனாமியால் ஏற்பட்ட அதிஷ்டமேயாகும். ஏற்கனவே இருந்த கடன்கள் அனைத்தும் ரத்துச் செய்யப்பட்ட நிலையிலேயே இந்தக் கடன் ரீதியிலான ஆயுதக் கொள்வனவுகளை மேற்கொள்ள முடிகிறது. எனவே சுனாமி இலங்கை அரசுககு அடித்த சுவீப்பே! ஆனால் அதன் பலனைத் தமிழ் மக்களும் அனுபவிப்பதற்கும் வழி செய்து கொடுக்க வேண்டியதே தார்மீகப் பண்புள்ள அரசினது கடமையாகும். ஆனால், இலஙகை அரசு அதனை என்றுமே செய்யப்போவதில்லை என்பது காலம் உணர்த்தி வரும் உண்மையாகும்.

# ஈராக்கில் கார்க் குண்டுத் தாக்குதல்

## 26 பேர் உயிரிழப்பு; பலர் படுகாயம்!

(பாக்தாத்)

**ஈராக் தலைநகர் பாக்தாத்தில் நேற்றுக் காலை சன நெருக்கடி மிக்க பகுதிகளில் இடம்பெற்ற இரண்டு கார் குண்டு தற்கொலைத் தொக்குதலில் குறைந்தது 26 பேர் கொல்லப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.**

**தலைநகர் பாக்தாத்தில் மிகவும் இறுக்கமான பாதுகாப்பில் உள்ள அவுஸ்ரேலிய தூதரகத்துக்கு முன்னாள் முதலாவது கார்க்குண்டு தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டதில் 10 பேர் கொல்லப்பட்டனர்.**



இந்தத் தாக்குதலில் அவுஸ்ரேலிய தூதரகப் பணியாளர்கள் எவரும் காயமடையவில்லையென அவுஸ்ரேலிய தலைநகர் கன்பராவில் அந்நாட்டு வெளிவிவகார அமைச்சின் பெண் பேச்சாளர் தெரிவித்தார்.

இரண்டாவது தாக்குதல் முதலாவது தாக்குதல் இடம்பெற்று 30 நிமிடத்தின் பின்னர் தலைநகரில் உள்ள பொலிஸ் நிலையத்தின் அருகில் நடத்தப்பட்டது. இதில் 16 பேர் கொல்லப்பட்டனர்.

இந்த இரு தாக்குதல்களிலும் பெருமளவானோர் காயமடைந்து வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.


இதேவேளை இந்தத் தாக்குதல் இடம்பெற்று சிறிது நேரத்தின் பின்னர் மூன்றாவது கார்க்குண்டு தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டதாகவும் ஆனாலும் இது தொடர்பான விபரங்கள் கிடைக்கவில்லையெனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனிடையே எதிர்வரும் 30 ஆம் திகதி ஈராக்கில் நடைபெறவுள்ள தேர்தலை முன்னிட்டு ஈராக்கின் அயல் நாடுகள் அனைத்துக்குமான எல்லைப் பகுதிகள் ஊடான போக்குவரத்து பாதுகாப்புக் கருதி மூன்று நாட்களுக்கு மூடப்படுமென ஈராக்கிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

அத்துடன் இந்தக் காலப் பகுதியில் அலுவலர்களின் அனுமதிக்கப்பட்ட வாகனங்கள் மட்டுமே அனுமதிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஏனெனில் கார்க் குண்டுத் தாக்குதல்களைத் தடுப்பதற்காகவே இந்த நடைமுறையெனவும் அவர்கள் தெரிவித்தனர்.


# அதிர்ஷ்டம் இல்லாத சேவல் ஆண்டு



சிங்கப்பூர், ஜப்பான், தாய்வான், கொரியா உட்பட பல்வேறு நாடுகளில் சந்திர நாட்காட்டி முறை கடைப்பிடிக்கப்படுகிறது. அதன்படி இந்த நாடுகளில் புத்தாண்டு அடுத்த மாதம் 9 ஆம் திகதி பிறக்கிறது. இந்தப் புத்தாண்டு சேவல் ஆண்டாக கடைப்பிடிக்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு விலங்குகளின் பெயரில் புத்தாண்டு கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இதுவரை குரங்கு ஆண்டு கடைப்பிடிக்கப்பட்டது.

குரங்கு ஆண்டு அதிஷ்டம் தந்த ஆண்டு என்கிறார்கள். ஆனால் சேவல் ஆண்டு அதிஷடம் இல்லாத ஆண்டாம். எனவே இந்த சேவல் ஆண்டு பிறப்பதற்கு முன்பே திருமணம் செய்துவிட வேண்டும் என்பதில் காதலர்கள் தீவிரமாக உள்ளனர். சிங்கப்பூரில் சேவல் ஆண்டு பிறப்பதையொட்டி இராட்சத சேவல் வடிவில் ஒரு விளக்கை தொங்க விட்டுள்ள காட்சியைப் படத்தில் காணலாம்.

# இரு விமானங்கள் நடுவானில் மோதின!



அமெரிக்காவின் ஒக்லசாமா நகருக்கு அருகே நடுவானில் பறந்துகொண்டிருந்த இரண்டு விமானங்கள நேருக்குநேர் திடீரென்று மோதிக்கொண்டன. இதில் 1 விமானம் பயிர் நிலங்களில் பூச்சி மருந்து தெளிக்கும் விமானம். இன்னொன்று அமெரிக்க இராணுவ விமானம். இந்த விமானம் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தது.

இரண்டு விமானங்களும் மோதியதில் பூச்சி மருந்து தெளிக்கும் விமானம் நொருங்கி விழுந்தது, இதில் இருந்த விமானியும் கொல்லப்பட்டார். இராணுவ விமானத்தில் இருந்த இரண்டு வீரர்களும் பரசூட் மூலம் குதித்து காயங்களுடன் தப்பிவிட்டனர்.

# மயக்க மருந்து கொடுத்தே வீரப்பன் பிடிக்கப்பட்டுள்ளார்!

## குடியுரிமை பாதுகாப்பு மையம் தகவல்



(சென்னை)

சந்தனக் கடத்தல் வீரப்பன் பொலிஸ் சண்டையில் கொல்லப்படவில்லை அவரை ஏற்கனவே பிடித்து சித்திரவதை செய்து கொன்றுவிட்டு அதிரடிப்படைப் பொலிஸார் நாடகமாடியுள்ளனர் என்று தமிழ்நாடு குடியுரிமை பாதுகாப்பு மையம் (சி.பி.சி.எல்.) புகார் தெரிவித்துள்ளது.

அதன் சார்பில் அமைக்கப்பட்ட உண்மை அறியும் குழுவின் அறிக்கை சென்னையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பத்திரிகையாளர் சந்திப்பில் வெளியிடப்பட்டது. இது குறித்து அக்குழுவின் உறுப்பினரும் மக்கள் ஜனநாயக முன்னணி அமைப்பின் மானிலச் செயலருமான பேராசிரியர் ராமசாமி நிருபர்களிடம் கூறியதாவது -

வீரப்பனை சண்டையில் சுட்டுக்கொன்றதாக அதிரடிப் படைப் பொலீஸார் கூறுகின்றனர். ஆனால், சம்பவம் நடந்ததாகக் கூறப்படும் வானில் குண்டுகள் துளைத்த விதத்தைப் பார்க்கும்போது அங்கு சண்டை நடந்ததற்கான அடையாள்மே இல்லை.

சுட்டுக் கொல்லப்பட்ட வீரப்பன் மற்றும் இவரது கூட்டாளிகளின் உடல்கள் நிர்வாண நிலையில் போர்வையால் போர்த்தப்பட்டு இருந்தன. அவற்றை உடனடியாக புகைப்படம் எடுக்க பத்திரிகையாளர்களை பொலீஸார் அனுமதிக்கவில்லை. உண்மையில் சண்டை எனில் பொலீஸார் ஏன் அவ்வாறு செய்ய வேண்டும்?

வீரப்பனின் தலையில் காணப்பட்ட காயம் சண்டையின் போது ஏற்பட்ட குண்டு காயம் அல்ல என்பது தடய அறிவியல் நிபுணர்களின் கருத்து. ரத்தம் காய்ந்த நிலையில் இருந்த அந்தக் காயம் கண்டிப்பாக 10 முதல் 12 மணி நேரத்துக்கு முன்பாகத்தான் ஏற்பட்டிருக்க முடியும் என்கிறார்கள் மருத்துவர்கள்.

ஆனால், நாங்கள் நேரடியாகச் சென்று சேகரித்த தகவலின்படி, பொலீஸார் வீரப்பனையும் அவரது கூட்டாளிகளையும் ஒக்டோபர் 16 ஆம் திகதியே பிடித்துவிட்டனர். அவர்களை இருநாட்கள் சித்திரவதை செய்து சுட்டுக் கொன்றுவிட்டு மோதலில் சுட்டுக் கொன்றதாக நாடகம் ஆடுகிறார்கள்.

மோரில் மயக்க மருந்து கலந்து வீரப்பனைப் பிடித்தார்களா? வீரப்பன் மோர் விரும்பி சாப்பிடுவார் என்பதால் மோரில் மயக்க மருந்து கலந்து உறவினர்கள் மூலம் கொடுத்து அவரைப் பிடித்திருக்கலாம் என்று சந்தேகிக்கிறோம் இதற்குக் காரணம் சம்பவம் நடந்த நாளில் அதிரடிப்படை பொலிஸார் பல இடங்களில் மோர் கேட்டு அலைந்துள்ளனர். இதை அப்பகுதி மக்களே தெரிவித்தனர்.

பொலீஸாரின் அச்சுறுத்தல், உயிர் பாதுகாப்பு உள்ளிட்ட காரணங்களால் உண்மையை வெளியே சொல்ல மக்கள் அச்சப்படுகின்றனர். வீரப்பனை பொலீஸார் சுட்டுக் கொன்றது மனித உரிமை மீறல். உண்மை அறியும் குழு அறிக்கையை தமிழக, கர்நாடக அரசுகளுக்கும் தேசிய மனித உரிமைகள் ஆணையத்துக்கும் அனுப்புவோம் என்றார் ராமசாமி.

## உலக நோக்கு

# எந்த நேரமும் எனது உயிருக்கு அதிரடிப்படையால் அச்சுறுத்தல்!

## வீரப்பன் மனைவி பேட்டி



என்கணவரைக் கொல்வதற்கு முன்பே என்னை அதிரடிப்படையினர் கொலைசெய்யத் திட்டமிட்டிருந்தனர். இதை என்னிடம் இன்ஸ்பெக்டர் ஒருவர் தெரிவித்தார். எந்த நேரமும் எனக்கு அதிரடிப்படையால் ஆபத்து நேரிடும் என்று வீரப்பனின் மனைவி முத்துலட்சுமி குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக சென்னையில் நிருபர்களிடம் அவர் கூறியதாவது. என்கணவர் இறந்த 10 நாட்களுக்குப்பின் ராமலிங்கம் என்ற இன்ஸ்பெக்டர் என்னைச் சந்தித்தார். அவர் மேட்டூரில் இருந்தவர். அங்கிருந்து டெல்கிக்கு மாற்றப்பட்டார். உன் மீது கர்நாடக பொலிஸில் 17 பிடியாணைகள் உள்ளன. அதைப் பயன்படுத்தி உம்மை கைது செய்துவிடுவோம் இந்த விஷயத்தை அப்படியே விட்டுவிடவண்டும் மறு பிரேதபரிசாதனை என்று கேட்கவேண்டாம். மனித உரிமைக்குழுவிடம் போகக்கூடாது.

அமைதியாக இருந்தால் அரசாங்கத்தால் வீடுதருவார்கள் என்றும் அவர் தெரிவித்தார். இதன் போது என் கணவரைச் சுட்டுக்கொன்றீர்களா? பிடித்துவைத்துக் கொன்றீர்களா என்ற உண்மை தெரியாமல் நான் விடமாட்டேன் என் உயிர்பிரியும்வரை அடிபணியமாட்டேன் என்று கூறிவிட்டேன்.

அதே இன்ஸ்பெக்டர் மூன்று நாள் கழித்து மீண்டும் என்னைச் சந்தித்தார். உன்னையும் அதிரடிப்படைகொலை செய்யத் திட்டம் தீட்டியுள்ளது. வீரப்பனுக்கு முன்பே உன்னை தனியாக அழைத்து கொலை செய்யும் படி என்னிடம் அதிகாரிகள் கூறிவிட்டனர். நான் மறுத்துவிட்டேன் என்று அவர் தெரிவித்தார்.

என்னை முன்பே கொலைசெய்து விட்டால் இந்த நாடக விவகாரங்களை யாருமே வெளிக்கொண்டுவரமாட்டார்கள் என்று அதிரடிப்படை யோசித்திருக்கலாம்.

எனக்கு எந்த நேரத்திலும் அதிரடிப்படையினரால் ஆபத்து ஏற்படும் அச்சம் உள்ளது. என்னிடம் இருந்து முடக்கி வைத்த பொருட்களை திருப்பித் தரமறுக்கின்றனர். எஸ்.பி. அசோக்குமாரிடம் பொருட்களை தரும்படி கேட்டேன். நீதிமன்றம் போகவேண்டாம் என்று அவரும் மிரட்டுகிறார்.

என் கணவர் பிடிபட்டிருந்தால் அதிரடிப் படையினர் பலர் இறந்திருப்பார்கள். அந்த வண்டியில் துப்பாக்கிச் சண்டை நடந்த மாதிரி தெரியவில்லை. வானில் ரத்தக்கறையே இல்லை.

எனது பெயரில் வங்கியில் மூன்று லட்சம் ரூபாய் இருக்கிறது. பாரம்தூக்கி ஒன்று வாடகைக்கு விட்டுள்ளேன். மாதம் 50 ஆயிரம் வாடகை வரவேண்டியதைப் பொலிஸார் கைப்பற்றி வெறும் 8 ஆயிரம் ரூபாதான் தருகின்றனர். மூன்று பவுண் நகையும் பொலிஸாரிடம் உள்ளது. ஸ்கூட்டி மோட்டார் சைக்கிளும் பொலிசாரிடம் உள்ளது. இந்தப் பொருட்களை பொலிஸார் திருப்பித்தரவேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# மீள்கட்டமைப்புக் குறித்து சரியான திட்டமெதுவும் அரசிடம் கிடையாதாம்!

## ஜே.வி.பி கூறுகிறது

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் புனர்நிர்மாண, மீள்கட்டுமானப் பணிகளை திறம்பட மேற்கொள்வதற்கு - கிடைக்கக்கூடிய வளங்களை சரியான முறையில் பயன்படுத்தக்கூடிய திட்டங்கள் எதையும் அரசாங்கம் கைவசம் வைத்திருக்கவில்லையென ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஜே.வி.பியைச் சேர்ந்த அமைச்சரான லால்காந்த குறிப்பிடுகையில் -

முக்கிய பெரிய வர்த்தகர்களிடம் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் புனர்நிர்மாண மற்றும் மீளமைப்பு கட்டுமானப் பணிப் பொறுப்புக்களை ஒப்படைக்க எடுத்த அரசின் முடிவு கண்டிக்கத்தக்கது.

இந்தப் பணிகளை அகற்றுக் கொள்ளவிருக்கும் வர்த்தகர்கள், கூறியதைச் செய்யும் வெறும் சோம்பேறித்தனம் பிடித்தவர்கள். இவர்கள் அரசை படுகுழிக்குள் தள்ளுவதைத் தவிர வேறெதையும் சரியாகச் செய்யத் தெரியாதவர்கள்.

படையினரும் ஜே.வி.பி. கட்சித் தொண்டர்களும் உடனடி நிவாரண நடவடிக்கைகளில் இறங்கியிராவிட்டால், தொற்றுநோய்களின் வடிவில் நாடு இன்னொரு பேரழிவை எதிர்நோக்கியிருக்கும். அரசின் புதிய கொள்கையால் இவ்வாறு உடனடி நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் தற்போது புனர்நிர்மாண மற்றும் மீள்கட்டுமானப் பணிகளில் ஈடுபடமுடியாமல் இருக்கின்றது.

கிராமங்களை மையமாகக் கொண்ட எத்தனையோ தொழிலதிபர்கள் இந்தப் பணிகளில் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்யக்கூடிய நிலை இருக்கும்போது, அனைத்து கட்சிகளையும் ஒற்றுமையாக பணியாற்ற கோரிக்கை விடுத்துக்கொண்டு, சோம்பேறித்தனம் பிடித்த பெரும் வர்த்தகர்களை அரசு நாடியிருப்பது ஏன் என்று தெரியவில்லை.

ரயில்வே வர்த்தக யூனியன் உறுப்பினர்கள் புகையிரதப் பாதையைச் சீரமைக்க நாளொன்றுக்கு 12 மணித்தியாலங்கள் என்ற கணக்கில் சிரமப்பட்டுக்கொண்டிருக்க, ரயில்வே அமைச்சரும் அவரது பிரதி அமைச்சரும் இன்னொரு பக்கம் தங்களை விளம்பரப்படுத்துவதிலேயே முக்கியமாக ஈடுபட்டிருந்தனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மொத்த உள்ளூர் உற்பத்தி 1 வீதத்தால் வீழ்ச்சியடையும்!

## சர்வதேச நாணய நிதியம் மதிப்பீடு

(கொழும்பு)

சுனாமி பேரனர்த்ததுக்கு பின்னர் இலங்கையின் மொத்த உள்ளூர் உற்பத்தி இந்த வருடம் ஒரு சதவிகிதத்தால் வீழ்ச்சியடையலாமென சர்வதேச நாணயநிதியம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சர்வதேச நாணய நிதியம் மேலும் தெரிவித்துள்ளதாவது -

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் உல்லாசப் பயணத்துறை சார்ந்த வருமானம் 15 சதவீதம் வீழ்ச்சியடையலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

எனினும் ஏற்றுமதிதுறைகள் பெரியளவில் பாதிக்கப்படவில்லை எனத்தெரிவித்துள்ளது. சுனாமி பேரனர்த்தம் ஏற்பட்ட பின்னர் மேற்கொள்ளப்பட்ட முதல் மதிப்பீட்டிலேயே அந்த அமைப்பு இவ்வாறு தெரிவித்துள்ளது.

# திட்டமிடல் குழுவினருடன் கேணல் சூசை சந்திப்பு!

(கிளிநொச்சி)

சுனாமியின் தாக்குதலால் அழிக்கப்பட்ட தமிழ்ப் பிரதேசங்களை மீளக் கட்டியெழுப்புவதற்கான திட்டமிடல் குழுவினரை தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை நேற்றுமுன்தினம் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை 3.30 மணியளவில் முல்லைத்தீவு செயலணிக்குழுவினரின் செயலகத்தில் இவர்களைச் சந்தித்து கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை கலந்துரையாடினார்.

இந்தக் கலந்துரையாடலில் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு நகரை மீளக்கட்டியெழுப்புவதற்காக திட்டங்களை வகுத்தல் தொடர்பாகவும் குடியிருப்புக்கள் அமைப்பதற்குரிய ஏதுவான இடங்களைத் தெரிவுசெய்தல்

மற்றும் மக்களுக்கு அமைத்துக் கொடுக்கவுள்ள குடியிருப்புக்கள் எவ்வாறு அமையவேண்டும் என்பது தொடர்பாகவும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

# அழிவுகளைப் பார்த்தார் போலந்துப் பிரதமர்!

(கொழும்பு)

போலந்துப் பிரதமர் மரேக் பெல்கா நேற்று இலங்கைக்கு குறுகிய நேர விஜயத்தை மேற்கொண்டு சுனாமியால் சேதமடைந்த அம்பாந்தோட்டைப் பகுதிகளைப் பார்வையிட்டார்.

நேற்றுக் காலை 11.50 மணியளவில் கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையத்தை வந்தடைந்த போலந்துப் பிரதமர் அங்கிருந்து அம்பாந்தோட்டைக்குச் சென்று சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் பார்வையிட்டார்.

அத்துடன் அம்பாந்தோட்டைக்கு அடுத்துள்ள வீரவில் விமானப் படைத் தளத்தில் ஜனாதிபதி சந்திரிகாவுடன் பேச்சு நடத்திய அவர் உடனடியாகவே அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார்.

### மூன்று...

பொருட்களில் ஒரு லொறி பொருட்கள் படையினரால் மாவட்ட செயலகத்தில் இறக்கப்பட்ட பின்னர் மிகுதி இரு லொறி பொருட்களும் தமிழர்புனர்வாழ்வுக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

அரச நிவாரணங்கள் பாதிக்கப்பட்ட தமிழ் மற்றும் முஸ்லிம் கிராமங்களின் மக்களுக்கு உரிய முறையில் பாரபட்சமின்றி வழங்கப்படாத நிலைமை தொடரும் அதேவேளை, அரசசார்பற்ற உள்ளூர் அமைப்புகள் மூலம் தமிழ் மற்றும் முஸ்லிம் கிராமங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு தொடர்ந்து படையினர் இடையூறுகளை விளைவிப்பது மிகவும் விசனத்திற்குரிய விடயம் என்று பாதிக்கப்பட்ட பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். (10)

### அடுத்த..

கிராமங்களையும் தேவையான அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளையும் கொண்ட நகரங்களாகவும், கிராமங்களாகவும் அபிவிருத்தி செய்யப்படும்.

அரசியல் கட்சிகள் உட்பட அனைத்து தரப்பினருக்குமிடையில் தற்போது ஒற்றுமை மேலோங்கியுள்ளது. இதனைப் பயன்படுத்தி ஏனைய பிரச்சினைகளுக்கும் தீர்வு காணமுடியுமெனவும் அவர் தெரிவித்தார்.

### சமாதான....

நாளை மறுதினம் கிளிநொச்சிக்குச் சென்று விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனையும் சந்தித்துப் பேச்சு நடத்துவர்.

இந்தச் சந்திப்பில் கலந்துகொள்வதற்கென தமிழீழ விடுதலைப் புலிகளின அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் நாளை இலங்கை வரவுள்ளார்.

அரசாங்கம் மற்றும் விடுதலைப் புலிகள் தரப்புத் தலைவர்களுடன் நோர்வே தூதுக்குழுவினர் சுனாமியால் ஏற்பட்ட அழிவுகள் தொடர்பாகவும் மீள்கட்டமைப்புக்கான உதவிகள் தொடர்பாகவும் பேசப்படும்.

தடைப்பட்டுப்போயுள்ள சமாதானப் பேச்சுக்கள் குறித்து இந்தச் சந்திப்பில் பேசப்படமாட்டாது என்றும் நோர்வே தூதரக அதிகாரி மேலும் தெரிவித்தார்.

### உயர்மட்ட..

புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

பிற்பகல் 2 மணிமுதல் சுமார் ஒரு மணிநேரம் நீடித்த இந்தச் சந்திப்பில் விடுதலைப் புலிகள் தரப்பில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழச்செல்வன், அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், சமாதான செயலகத்தைச் சேர்ந்த செல்வி ஆகியோர் பங்கேற்றனர்.

யு.என்.எச்.சி.ஆர். பிரதிநிதிகள் சார்பில் - உதவி உயர் ஆணையாளர் கெமல் மொர்ஜேன், சர்வதேச பாதுகாப்புக்கான யு.என்.எச்.சி.ஆர் இயக்குநர் கரிக்கா பெல்லர், யு.என்.எச்.சி.ஆரின் ஆசிய பசுபிக் பகுதிகளுக்கான இயக்குநர் ஜெனற்லிம், யு.என்.எச். சி.ஆர். அவசரகால இணைப்பாளர் நீல் றைன், யு.என்.எச். சி.ஆர். பிரதி பிரதிநிதி மஸ்ரி நொட்ஸ், யு.என்.எச். சி.ஆரின் உதவி நிறைவேற்று உயர் ஆணையாளர் ஜமால் அரபாத் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட கெமல் மொர்ஜேன் -

மனிதாபிமானப் பணிகள் தொடர்பாக விடுதலைப் புலிகளுக்கும் யு.என்.எச்.சி.ஆருக்கும் இடையில் நீண்டகாலமாகத் தொடர்புகள் இருந்து வருகின்றன. சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகள், புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகள் தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் ஆராய்ந்ததாகத் தெரிவித்தார்.

# 'சண்டே லீடர்' ஆசிரியர் நீதிமன்றத்தில் சரண்!

சண்டே லீடர் ஆங்கில வார இதழின் பிரதம செய்தி ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சரணடைந்தார்.

லசந்த விக்கிரமதுங்க வெளிநாட்டில் இருந்ததால் அவரால் நீதிமன்றில் ஆஜராக முடியவில்லையென அவரது சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

அத்துடன் அவர் மீதான பிடிவிறாந்து உத்தரவை வாபஸ் பெறுமாறு அவரது சட்டத்தரணிகள் விடுத்த வேண்டுகோளை நீதிபதி ஏற்றுக்கொண்டார்.

லசந்த விக்கிரமதுங்க நீதிமன்றத்தை அவமதித்தார் எனத் தெரிவித்து இலங்கை கிரிக்கெட் சபையின் முன்னாள் தலைவர் திலங்க சுமதிபால தாக்கல் செய்த வழக்கின் விசாரணைக்காக நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அவருக்கு நீதிமன்றம் உத்தரவு வழங்கியபோதும் அவர் ஆஜராகாத நிலையிலேயே பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(முந்திய செய்தி மூன்றாம் பக்கத்தில்)

**வாணி விலாஸ்**
**சுன்னாகம்**

**வேலையாட்கள் தேவை**

- ☆ சமையலாளர்
- ☆ சமையல் உதவியாளர்
- ☆ உணவு பரிமாறுபவர்
- ☆ சிட்டை எழுதுநர்
- ☆ சிற்றூழியர்கள்

மேற்குறிப்பிட்ட நிலைகளுக்கு ஊழியர்கள் தேவைப்படுகிறார்கள் பின்வரும் சலுகைகள் வழங்கப்படும்.

- ☆ உணவு வசதி
- ☆ தங்குமிடவசதி

ஊழயர்கள் நேரில் 24.01.2005 இற்குமுன் தொடர்புகொள்ளவும். அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை, கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

கே. கே. எஸ். றோட், சுன்னாகம். (சி-3747)

**வாணி விலாஸ்**
**உரிமையாளர் வவா.**

## நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அமெரிக்க டொலர் | 97.84 | 99.21 |
| ஸ்ரேலிங் பவுண் | 182.23 | 185.70 |
| யூரோ | 127.00 | 129.77 |
| சுவிஸ் பிராங் | 82.01 | 83.35 |
| யென் | 0.9517 | 0.9745 |

**NEW SCIENCE COLLEGE JAFFNA**

**2007 A/L**

CHEMISTRY:- திரு.மகேஸ்வரன்
திங்கள், வெள்ளி 6.00 A.M.
ஆரம்பம்:- 21.01.2005 வெள்ளி காலை 6.00 மணி
PHYSICS:- திரு.கருணாநிதி
சனி, ஞாயிறு 7.00 A.M
PHYSICS:- திரு.குகன்
சனி, ஞாயிறு 9.00 A.M
COM.MATHS:- திரு.செந்தில்நாதன்
சனி, ஞாயிறு 11.00 - 1.00
(சி-3748)

## மரண அறிவித்தல்

### அம்பலவாணர் முத்துச்சடையர்

நவாலியைப் பிறப்பிடமாகவும், சோழங்கன் கரணவாய் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் முத்துசடையர் (முன்னாள் தபாற்கந்தோர் கணக்காளர்) 19.01.2005 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற அம்பலவாணர் சின்னப்பிள்ளையின் ஏக புத்திரனும், பொன்னம்மாவின் அன்புக் கணவரும், திருமதி ஜெ.புவனேஸ்வரி (கனடா), திருமதி சி.சத்தியேஸ்வரி (கனடா), ஆகியோரின் அன்புத் தந்தையும், கு.ஜெயகுலசிங்கம் (கனடா), த.சிவசுப்பிரமணியம் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், செல்வன், சி.உபேந்திரன் (கனடா) அவர்களின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 20.01.05 வியாழக்கிழமை பகல் 1.00 மணியளவில் தகனக் கிரியைகள் நடைபெற்று பூரசன்திட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

கந்தவன உடையார் வளவு,
சோழங்கன்,
கரணவாய் தெற்கு, கரணவாய். (சி-3747)

திரு.க.சிவகுருநாதன்.
(பரம்)
மருமகன்

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 20.01.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.